298

சேந்திலாண்டவன் துணை.

மாத்ரு பக்தி

அல்லது

வீர ஹநுமான்

— ஓர் —

பக்தி ததும்பும் தமிழ் நாடகம்.

ஆசிரியன்

N. விசுவநாத ஐயர்

தஞ்சை

இந்நூலாசிரியர் இயற்றிய இதர தமிழ் நாடகங்கள்:-

ராஜசேகரன் அல்லது மூன்று சேசப்ரஷ்டர்கள்,

வீரஸிம்ஹன் அல்லது தெய்வ்காதலின் இலக்ஷியம்,

ஸ்ரீ ராமதாஸ் அல்லது பக்தியே பரமானந்தம்,

அப்பூதி அடிகள்

முதலியன

பதிப்பகம்

தஞ்சை "ஸ்ரீ ஷண்முக அச்சுக்கூடம்"

MAHARAJAH SERFOGI'S ... TANJORE

காபிரைட் ரேஜிஸ்டார்டு] [விலை அணா பத்து.

298

315.

By kind permission

This Play

Is

MOST RESPECTFULLY DEDICATED

To

My Revered Friend

RAO BAHADUR

P. SAMBANDA MUDALIAR.

THE FOREMOST PLAYWRIGHT OF SOUTH INDIA

As a token of

My admiration and appreciation

Of

His true services in the field

Of

TAMIL DRAMA.

உ

செந்திலாண்டவன் துணை.

நான் முகம்.

பகவத் சரித்திரங்களைப் பாங்குடன் எடுத்துரைக்கும் பாகவத சிரோன்மணிகள் அருளினால் அறிந்த சகுந்தோபாக்கியானம் என்னும், பக்தி தலைச்சிறந்து நிற்கும் இச்சரிதையை நாடகமாக எழுதி நடித்தால், யாவராலும் விரும்பிப் போற்றப்படும் என்னும் ஆசைப்பெருக்கால், இம்முயற்சியில் அடியேன் ஈடுபடலாயினேன். தமிழன்பர்களும், நடர்களும், என் ஏனைய நாடகநூல்களை ஆதரித்து வருவதுபோல, இச்சிறுநூலையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது தமிழ்நாட்டின்கண், நாடகக்கலை நலமுறத் திகழச் செய்து, யாவர்க்கும் ஓர் புத்துணர்ச்சியைப் பல்லாண்டுகளாக அளித்துவரும் ராவ் பகதூர் P. சம்பந்த முதலியார் அவர்கள், இந்நூலைத் தமக்கு சமர்ப்பணம் செய்யும் பெருமையை எனக்கு மனமுவந்தளித்ததற்கு, அவருக்கு என் நன்றி என்றும் உரித்தாகுக.

இந்நாடகத்தையாவது அல்லது எனது இதர நாடகங்களையாவது நடிக்க விரும்புவோர் என்முன் அனுமதி பெற்ற பின்னரே நடித்தல் வேண்டும். இல்லையேல் என்னுடைய காப்பிரைட் பாத்தியங்களை மீறிய குற்றத்திற்குள்ளாவார்கள்.

ஸ்ரீ ஸ்கந்த பவனம்,
தெற்கு அலங்கம், தஞ்சாவூர்,

N. விசுவநாதன்.
ஆசிரியன்.

நாடக உறுப்பினர்கள்.

ஸ்ரீராமன்	-	- அயோத்தி அரசன்.
இலக்ஷ்மணன்	-	- ஸ்ரீராமனின் சகோதரர்.
ஹநுமான்	-	- ஸ்ரீராமனின் தொண்டர்.
அங்கதன்	-	- ஸ்ரீராமனின் நண்பன்.
சகுந்தன்	-	- காஞ்னபுரத்தரசன்.
நாகன்	-	- சகுந்தனின், வேடுவத்தலைவன்.
பரந்தாமன்	-	- விசுவாமித்திரரின் சிஷ்யன்.
நாரதர்	}	
விசுவாமித்திரர்		
குத்ஸர்		இருஷிகள்.
வசிஷ்டர்		
காசிபர்		
ஆங்கிரஸர்		
ஸீதை	-	- ஸ்ரீராமனின் தர்மபத்தினி.
அஞ்சனாதேவி	-	- ஹநுமானின் வீரத்தாய்.

இன்னும், காவலர்கள், இருஷிகள் முதலானோர்.

நாடகம் நிகழ்விடம்—

அயோத்தியிலும், அஞ்சனகிரியிலும், அதைச்சார்ந்த தபோ வனங்களிலுமாம்.

உ

சேந்திலாண்டவன் துணை.

மாத்ரு பக்தி

[அல்லது]

வீர ஹநுமான்.

களம் 1.

இடம் :— காஞ்சனபுரத்தை அடுத்த ஓர் காடு.

காலம் :— மாலை.

நடர் :— சகுந்தன், நாகன், நாரதர், முதலானோர்.

ஓர் புள்ளிமான் குட்டி ஓடி மறைகின்றது. சகுந்தனும் நாகனும் அதைத் துரத்திக் கொண்டே ஓடுகின்றார்கள்.

சகு. ஆ அதோ! அதோ! ஓடுகின்றது. நாகா! அப்புள்ளி மானைப் பிடிக்காமல் திரும்பமாட்டேன்.

நாக. அரசே! பொழுதாகிவிட்டது. இனி அம்மானைப் பின் தொடருவதில் பயனில்லை.

சகு. சீ! நாகா! என்ன பிதற்றுகின்றனை. கொடிய வேங்கையை யும் வெட்டி வீழ்த்திய எனக்கு இது ஓர் பெரிய காரியமா! சீக்கிரமாக ஓடிவா பின்னால். (பாய்ந்து ஓடுகிறான்)

நாக. ஏது, நமது அரசர் இவ்வளவு பிடிவாதமாக இருக்கின்றார். (பின்னால் செல்லல், நாரதர் பிரவேசம்)

நார. நாமோ திரிலோக சஞ்சாரி. பெண்டுபிள்ளைகளின்றி இருப் பதால் நமக்கு குடும்ப விசாரம் இல்லை. உலகின்கண் வியா பித்திருக்கும் அஞ்ஞானத்தை ஓட்டி மெய்ஞானத்தை நாட்டி வருகிறோம். ஆஹா! தன் புத்திரர்களுக்குத்

தத்துவ ஞானத்தை உபதேசித்து அவர்களை நல்வழிக்குத் திருப்பியதால் நம்மீது கோபம் அடைந்த தக்ஷன், நம்மை நிலையில்லாது திரியவேண்டுமென்று சபித்ததும், நம் நல்ல காலமென்றே நினைக்கின்றோம். இல்லையேல் நாம் இது நாள் இல்லறத்தில் வீழ்ந்து வருந்துவதுமின்றி “நாரதா கலகப்பிரியா” என்ற கீர்த்திப் பெயரையும் பெற்றிருக்க மாட்டோம். ஏ தக்ஷா! நீ மிகவும் புத்திமான். நம் விஷயத்தில் மிக்க நன்மையைச் செய்திருக்கிறாய். அத னால்தான் நீ, கடைசியாக கைலைவாசன், கங்காதரன், கௌரி மனோகரன், சாக்ஷாத் சங்கரனின் தொண்டனாகி, சிவகணங்களுக்கும் தலைவன் ஆயினை .... ஆ! மாலைப் பொழுது நெருங்கிவிட்டது. நம் வழக்கப்படி ஏதேனும் ஒரு சிறு கலகம் செய்யலாமெனச் சுற்றிப் பார்த்தும், கலகத்திற்கு இதுவரை வழியில்லை. செய்யாமலும் இருக்க முடியாது. இந்தக் கஷ்டத்திற்கு என் செய்வது! (யோசித்து, நாற்புறமும் பார்த்து) இதென்ன! அவ்விடத்தில் புகை காணப்படுகின்றது. ஓஹோ! விசுவாமித்திரரின் பர்ண சாலையிலோ! - சரிதான். இராஜரிஷிப்பட்டம் பெற்றிருந்த அவருக்குச் சமீபத்தில் பிர்ம்மரிஷி பதவி கிடைத்ததைக் கண்டு முனிசிரேஷ்டர்கள் சந்தோஷம் கொண்டாடுகின் றனர் போலும்! இனி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. விசுவாமித்திரர் ஆசிரமத்திற்கு இப்பொழுதே சென்றால் கலகத்திற்கு வேண்டியவழி அகப்படும் என்பதிற் சந்தேக மில்லை. காதிராஜன் புத்திரரான விசுவாமித்திரர் அரசனாயி ருந்து, பின்னர் இராஜரிஷிப் பட்டம்பெற்று தன் கடுந் தபோ சக்தியினால் இதுபோது பிர்ம்ம ரிஷிப்பதவியைப் பெற்றபோதிலும், அவருக்கு இயற்கையாக இருக்கும் அகம்பாவமும், கடுங்கோபமும், பிடிவாதமும் இன்னமும் அவரை விட்டு நீங்கினபாடில்லை. ஆதலின் அவரை எப்படி யும் திருத்தவேண்டும். (வேடுவரின் கொம்பு, தப்புமுதலியவை களின் ஆரவாரம் கேட்டல்) ஆ! இதென்ன சப்தம்! (ஞான திருஷ்டியால் அறிந்து) ஓஹோ! நமது சிஷ்யன் காஞ்சன புரத்தாசனை சகுந்தன் க்ஷத்ரிய தருமப்படி வேட்டையாடி

வருகின்றான். நற்காரியத்தில் ஈடுபட்டிருக்கும் இவ்வரசன் முன் நாம் இப்பொழுது எதிர்ப்படவேண்டாம். விசுவாமித்திரரின் ஆசிரமமே செல்வோம். (செல்லல் - சிறிது நேரஞ் செல்ல சகுந்தன், நாகனுடன் பிரவேசித்தல்)

சகு. நாகா! நம் குடிகளின் பயிர்களை அழிக்கும் அநேக துஷ்ட மிருகங்களை மாய்த்தோம். ஆயினும் அன்புடன் நான் வளர்க்க எண்ணி, கடைசியாகத் துரத்திவந்த அப்புள்ளி மான்குட்டி, என்னை வெகுதூரம் ஓடிவரச்செய்து, முடிவில் தப்பியும் விட்டதே! ஆஹா! அம்மான் குட்டியிடம் அன்புவைத்து எவ்வளவு தூரம் ஓடிவந்தேன்.

நாக. அரசே! தாங்கள் இதற்குமுன் எவ்வளவோ சமயங்களில் வேட்டையாடிய போதிலும், இன்றைய வேட்டைக்குச் சமமாக மற்றவைகளைக் கூறமுடியாது. வேடுவ ஜாதியில் பிறந்த, நானே தங்களுடன் ஓடிவர முடியவில்லையென்றால் தங்கள் உற்சாகத்தை யாரால் சொல்ல முடியும்!

சகு. நண்பா! நீ தெரிவித்தது உண்மையே. சற்று முன்பாக இப்பக்கம் மறைந்த அப்புள்ளிமானை, முதலில் கண்டவுடன் ஓர் உற்சாகம் என்னை ஆட்கொண்டது. அதனாலேயே நான் இவ்வளவு சந்தோஷத்துடன் என்னையும் மறந்து அதனைப் பின்தொடர்ந்தேன். அப்படி வந்தும் அம்மான் நம் சொந்தமாகாது மறைந்து விட்டதே! இனி என்ன செய்வது. என் கைகால்களும் அயர்ந்தன. ஆகலின் நாம் சற்றுநேரம் இங்குத் தங்கி இளைப்பாறிச் செல்வோம்.

நாக. அரசே! தாங்கள் இளைப்பாற வேண்டியது அவசியமே. ஆயினும் அஸ்தமிக்கும் சமயமாயிற்று. மேலும் நம்மைத் தொடர்ந்த ஏனைய வேடுவர்கள், தங்கள் பிரிவினால் வருந்தி இந்நேரம் தங்களை எங்குத் தேடித்திரிகின்றனரோ? அதற்கென்ன செய்வது?

சகு. ஆம், நீ கூறுவதும் சரி. நாகா! நான் இன்னும் சிறிது

நேரம் இங்குத்தங்கி, பின்னர் கூடாரத்திற்கு வருகின்றேன். நீ உடனே சென்று, நம் வேடுவர்களை அங்கு அழைத்து வா! ஓடு சீக்கிரம். (நாகன் வணங்கிச் செல்லல்.) (அரசன் கீழே அமர்ந்து) ஆஹா! நறுமணம் வீசும் இந்த வனத்தின் அழகுதான் என்னே! கதிரவனின் கிரணங்கள் சிறிதே னும் இந்நிலத்தில் புகாவணணம் இம்மரக்கிளைகள் ஒன்றோ டொன்று சேர்ந்து ஒன்றுபட்டு கலந்திருப்பது அளவற்ற ஆனந்தத்தை அளிக்கின்றது! வரும் விருந்தினர்களுக்கு நிழலையும் கனிகளையுமளிக்கும் இம்மரங்கள் செய்யும் அறமே நல் அறம். வேட்டையினால் ஏற்பட்ட அயர்ச்சி யெல்லாம் முயற்சியின்றி நீங்குகின்றதே. ஆஹா! தொல்லையுற்ற நாட்டில் வாழ்வதை விட எல்லையற்ற இக் காட்டில் வாழ்தலே நலம். இதையறிந்தே மாதவர்கள் தனி மையான அடவிகளை விரும்புகின்றனர் போலும் (எழுந்து) நேரமாகின்றது - பாவம்! என்னைப் பின்பற்றி வந்த ஏனைய வேடுவர்கள் என் பிரிவால் வருந்தித் தவித்து நிற்பர். நான் அனுப்பிய நாகன், அவர்களைச் சந்தித்து இந்நேரம் நம் கூடாரத்திற்கு அழைத்து வந்திருப்பான். ஆஹா! இவ்வள விற்கும் காரணம் அம் மான்குட்டி யன்றோ. அதனை எப் படியும் பிடிக்க வேண்டும். இங்குதான் அது மறைந்தது. (தேடிப்பார்க்கையில் திகைத்து நின்று) இதென்ன விந்தை! அவ் விடத்தில் அக்னி ஜ்வாலைதெரிகின்றது! ஒருக்கால் காய் ந்தமரங்கள் ஒன்றோடொன்று உரசுவதனால் உண்டான காட்டுத்தீயாக இருக்குமோ! அல்லது என்னுடன் வந்த வேடுவர்கள் தங்கள் இருப்பிடத்தை நமக்கறிவிக்கும் பொருட்டு உண்டாக்கிய குறித்தீயாக இருக்குமோ! இல்லை இல்லை! ஹவிஸுடன் கூடிய நெய்யின் வாசனை வீசுகின் றதே! ஓஹோ! ஸத்வ குணம் வாய்ந்த முனி சிரேஷ்டர்கள் ஹோமம் செய்கின்றனர். எது எப்படி இருந்தபோதிலும் நாம் அங்குச் சென்று நம் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வோம். (செல்லல்)

[முதற் களம் முடிகிறது.]

களம் 2.

இடம்:— விசுவாமித்திரரின் பர்ணசாலை.

காலம்:— மாலை.

நடர்:— விசுவாமித்திரர், பரந்தாமன், குத்ஸர், ஆங்கிரஸர், காசிபர், வசிஷ்டர், நாரதர், சகுந்தன், ரிஷிகள், முதலானோர்.

(விசுவாமித்திரர் நின்றுகொண்டிருக்கிறார். இரு ரிஷிகள் ஹோமத்தின் அருகில் அமர்ந்திருக்கின்றனர். பரந்தாமன் ஓர் சுவடியை வைத்துக்கொண்டு முணு முணுத்துக் கொண்டிருக்கிறான். குத்ஸர், காசிபர், ஆங்கிரஸர் முதலியோர் பிரவேசம்)

விசு. குத்ஸரே! வரவேண்டும். காசிபரே! நமோநமஹ. அடடா! என்ன நமது ஆங்கிரஸர்கூட வந்து விட்டார்! வாருங்கள், (யாவரையும் மார்புறத் தழுவியபின்) அமருங்கள்.

ஆங்கீ. விசுவாமித்திரரே! இன்னும் வசிஷ்டரைக் காணோமே!

விசு. இந்நேரம் வந்திருக்கவேண்டும்............

பரந். ஸ்வாமி! வந்து இருக்கவில்லை. வந்துகொண்டிருக்கிறார்.

விசு. பரந்தாமா! நீ பேசாமலிருக்கமாட்டாய்?

பரந். ஸ்வாமி! நான் பொய் பேசவில்லையே. வசிஷ்டர் வந்து, இருக்கவில்லை - வந்துகொண்டிருக்கிறார் - என்று சொன்னேன். வேண்டுமென்றால் அதோ பாருங்கள், அவர் வந்துகொண்டிருக்கிறார்.

விசு. ஆம்! ஆம்! அடே பேசாமல் இரு. (வசிஷ்டர் பிரவேசிக்க, மற்றவர்கள் எழுந்து மரியாதை செய்கிறார்கள் விசுவாமித்திரர் அவரை மார்புறத் தழுவி) வசிஷ்டரே! தம்

வரவு நல்வரவாகுக! இதோ இவ்வுயர்ந்த மேடையின் மீது அமரவேண்டுகிறேன்.

வசி. (அமர்ந்து) விசுவாமித்திரரே! தங்களுடைய அன்பிற்கு மிகவும் சந்தோஷம். (நாரதர் அங்குத்தோன்ற யாவரும் எழுந்து மரியாதை செய்தல்)

விசு. மஹரிஷே! வரவேண்டும்! வரவேண்டும். (தழுவியபின்) அமரவேண்டும்.

வசி. பிர்ம்மபுத்திரரே! தாம் இச்சமயம் இங்கு பிராப்தமானதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். (எழுந்து) முனிசிரேஷ்டர்களே! இன்றையதினம் நம்மை இங்கு வரவழைத்த காதிராஜனின் புத்திரரான விசுவாமித்திரர் தன் இராஜ்யத்தைத் துறந்து, தன் தபோவலிமையினால் 'இராஜரிஷி' எனப் பெயர்பெற்று விளங்கினர். பின்னர் அப்பதவிக்கும் மேலான 'பிர்ம்ம ரிஷியிப்' பதவியை அடைய, இவர் விண்ணோரும் மண்ணோரும், போற்றும் படியான கடுந் தவம்செய்து ஸர்வேஸ்வரனின் அருளினால் அதனையும் இதுபோது அடைந்துள்ளார்.

நார. ஆதலால் வசிஷ்டரே! விசுவாமித்திருக்கு இத்தகைய பெருமையை அளித்த ஸர்வேஸ்வரனை நாம் சற்று நேரம் சிந்தனை செய்து வணங்கல் முறையல்லவா?

வச. ஆம்! ஆம்! அவ்விதமே இறைவனை வணங்குவோம். அமருங்கள். (யாவரும் அக்கினியைச் சுற்றி அமர்ந்து, கண் மூடி மௌனமாதல். சதுர்தன் பிரவேசம்)

சது. ஆஹா! ஜடை முடி தாரிகளாய் விளங்கும் இத் தபோநிதிகளின் பெருமையே பெருமை. அந்த ஹோம குண்டத்தினின்றும் பரந்து எழுகின்ற அக்னி ஜுவாலையானது இவர்களின் சிறந்த முகங்களின் அருகில் அழகுடன் எரிவது இவர்களுடைய திவ்ய தேஜஸ்ஸு இன்னும் எவ்வளவு ரம்

மியப்படுத்துகின்றது. அதோ! உயர்ந்த மேடையில் அமர்ந்திருக்கும் லோக குருவாகிய வசிஷ்டரின் பெருமை தான் என்னே! க்ஷத்ரிய முனிவராகிய விசுவாமித்திரரின் அருமைதான் என்னே. இருளைப் போக்கி ஈஸ்வர தத்துவத்தைத் தமது கலகத்தால் யாவருக்கும் வெளியிடும் நாரதரின் கீர்த்திதான் என்னே! மற்றுமுள்ள மாதவர்களின் தபோ வலிமைதான் என்னே! ஆஹா! இத்தகைய வரப்பிரஸாதிகளான உத்தமர்கள் அருகில் நாம் சென்று வணங்கி அவர்களின் ஆசிஸைப் பெற்றால் எவ்வளவு புண்ணியம். சீ! அப்படிச் செய்யலாகாது. சுகதுக்கங்களை ஒன்றாக ஏற்கும் இவ்வுத்தமர்கள் இப்பொழுது தங்களுடைய ஐம்புலன்களையும் அடக்கி, ஈசனை வணங்கி நிற்கின்றார்கள். ஸத்காரியத்தில் சார்ந்திருப்பவர்களை, நாம் கெடுக்கலாகாது. ஆதலால் இம்மகரிஷிகளை இங்கிருந்தே மனதில் நினைத்து ஆத்ம பிரதக்ஷணம் செய்து வணங்கிச் செல்வோம். (சிறிது நேரம் கை கூப்பிவணங்கிப் பின், தன்னைத்தானே மும்முறை சுற்றியபின் மகரிஷிகளை நோக்கி) "வசிஷ்டாதி முனிவர்களுக்கு சகுந்தன் நமஸ்காரம்" (விசுவாமித்திரர் கவனித்து தலையையசைத்துப்பின் மௌனமாதல். சகுந்தன் நமஸ்கரித்து எழுந்து) இனி நாம் இங்கு நின்றுகொண்டிருத்தல் அழகல்ல. நம்மிருப்பிடம் ஏகுவோம்! பாவம்! நம்மைக்காணாது வேடுவர்கள் மிக்க அலைந்து தவிப்பர். (செல்லல்)

நார. (தனக்குள்) பேஷ்! இன்றைக்கு நமக்கு நல்ல கலகம் அகப்பட்டது. நாராயண! (யாவரும் விழித்தல்.)

வசி. விசுவாமித்திரரே! நம் இருவருக்கும் எவ்வளவோ மனத்தாங்கல் இருந்தபோதிலும், தாம் பிர்ம்மரிஷி பதவிக்கு வந்தது எனக்கு மிகவும் சந்தோஷம். இன்னும் உம்முடைய தவம் மென்மேலும் விருத்தியாவதாக! யான் சென்று வருகின்றேன்.

விசு. வசிஷ்டரே! தாங்கள் இங்கு வந்து என்னைக் கௌரவப்

படுத்தியதற்காக மிகவும் சந்தோஷம் அடைகின்றேன். (மார்புறத்தழுவி அவரை அனுப்ப, மற்ற ரிஷிகளும் விடைபெற்றுச்செல்லல். நாரதர் யோசனையுடன் ஓர் மூலையில் அமர்ந்திருக்கிறார்.) என்ன நாரதப் பிர்ம்மமே! என்ன யோசனை பலமாகச்செய்கின்றீர். பார்த்தீரா என் சாமர்த்தியத்தை! கேட்டீரா 'பிர்ம்ம ரிஷி' என வசிஷ்டரும் கூறியதை!

நார. அவர் கூறி என்னபயன்! யாவருமன்றோ அதை நன்கு உணரவேண்டும். அப்பொழுது தான் உமக்குப் பெருமை. இல்லையேல் சிறிது நேரத்திற்கு முன் இவ்வழிச் சென்ற ஒரு சிற்றரசன், தெரிவித்தபடியே ஏனையோரும் கூறுவர்.

விசு. என்ன! தாம் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே! கேலிசெய்கின்றீர்களா?

நார. நானா கேலி செய்பவன். கௌசிகரே! சற்றுமுன்னர் நாம் ஈசனை வணங்கி நின்றபொழுது ஒருவனுடைய குரலோசையைத் தாம் கவனித்தீரோ! ஞாபகமிருக்கிறதா?

விசு. ஆம்! ஆம்!! இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது. யாரோ ஒரு வீரன் நம்மை வணங்கிச் சென்றான்.

நார. அது சரிதான், ஆயினும் அவன் கூறிய சொற்கள் உமது காதில் விழாதது தான் ஆச்சரியம்.

விசு. ஏதோ 'நமஸ்காரம்' என்ற சொல் மாத்திரம் காதில் விழுந்ததுபோல் தோன்றுகிறது. அவன் என்ன புகன்றான் என்பதை நாமேன் கவனிக்கவேண்டும்?

நார. நாம் கவனிக்காது வேறு யார் கவனிப்பது? அவன் புகன்றதை நீர் அறிந்திடில் உண்மையில் உமது மனம் மிகவும் வருந்தும்.

விசு. நமக்கு வருத்தத்தை உண்டாக்கும்வண்ணம் அவன் புகன்றதென்ன?

நார. அதிக விசேஷமொன்றும் இல்லை. ஆயினும் சொல்ல மனம் இடம் தராமல் அன்றோ சஞ்சலமுடைகின்றது.

விசு. நாரதரே! சஞ்சலத்திற்குள்ளாக்கிய அவனை, நம்மை அஞ்சலி செய்யும்படி யான் செய்கின்றேன். என்ன புகன்றான் அவன்? கூறுங்கள் இப்பொழுது,

நார. ஒன்றுமில்லை, "வசிஷ்டாதி முனிவர்களுக்குச் சகுந்தன் நமஸ்காரம்" எனத் தெரிவித்தான்.

விசு. யார் சகுந்தனா!

நார. அதில் சந்தேகமென்ன.

விசு. காஞ்சனபுரத் தரசனா?

நார. ஆம் அந்த அறிவிலிதான் குற்றம் செய்தவன்.

விசு. இதில் குற்றமென்ன இருக்கிறது?

நார. ஆழ்ந்து கவனித்தால் அல்லவோ குற்றம் வெளிப்படும். நண்பரே! உம்மைப்போன்ற பல பிர்ம்ம ரிஷிகள் வீற்றிருக்கும் சபையை மறந்து, தைரியத்துடன் வசிஷ்டரை மாத்திரம் முதன்மை வைத்துக்கூறியது மற்றவர்களுக்கு அவமானமில்லையா? பொதுவாக "முனிவர்களே! சகுந்தன் நமஸ்காரம்" என ஏன் அவன் வணங்கலாகாது? அரசனாயினும் சமயமறியாது எதையும் கூறுதல் முறையோ? சீ! அவனைத் தண்டியாது விடுதல் அழகல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. தாமும் ஓர் பிர்ம்மரிஷி என்பதை அக் கர்வம் படைத்தவன் சிறிதும் அறியவில்லை போலும்.

விசு. ஆம் ஆம் "பிர்ம்ம ரிஷிகள் இருக்கும் இச் சபைக்கு நமஸ்காரம்" எனக் கூறாது, "வசிஷ்டாதி முனிவர்களுக்கு சகுந்தன் நமஸ்காரம்" என வணங்கிய அந்த க்ஷத்ரிய மூடனுக்கு தக்கவழி செய்கிறேன். அவன் என்னுடைய

மேன்மையை இன்னும் அறியவில்லை. "நம்மைப்போல் இவனும் ஓர் க்ஷத்ரியன்தானே" என என்னை சாமானியமாக நினைத்தனன் போலும். நாரதரே! இதோ பாரும் என் தபோ வலிமையை. (ஜலத்தைக் கையில் ஊற்றி) ஏ! கர்வம் படைத்த சகுந்தா! என்னையும் ஓர் பிர்ம்மரிஷி எனக் கருதாது கேவலமாகவன்றோ பேசினை. அரசன் என்ற ஆணவமன்றோ உன்னை அவ்வாறு பேசத் தூண்டியது. மகிமிக உயர்ந்த மன்னவனுயிருந்தும் உன்வாயில் இவ்விதம் வரலாமா. அடா மூடனே! சபையில் ஒருவனை உயர்த்தி மற்றவர்களைத் தாழ்த்திப் பேசிய உன்னை இதோ பஸ்மீகாப் படுத்துகின்றேன் பார். (கையை உயர்த்த நாரதர் தடுத்து.)

நார. பேஷ் விசுவாமித்திரரே! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்! மகாதவசிரேஷ்டராகிய தாம் கேவலம் ஒரு நரனின் பொருட்டுத் தமது தவப்பலனை இழக்கவோ நினைத்தீர். பேஷ் பேஷ், தாம் இவனைச் சபிப்பதால் தமது தவத்தின் சக்தியன்றோ குறையும். இதைத் தாம் அறியாதவரன்றே. அவனைத் தண்டித்து நீதி புகட்ட விருப்பமாயின் வேறு எவ்வளவோ வழிகள் இருக்கின்றனவே.

விசு. நாரதரே! எவ்வழியாயினும் சரி, என்னை அவமதித்த அச் சகுந்தன் சிரம் நாளைக் கதிரவன் மேற்றிசையில் விழு முன்னம் என் பாதத்தில் விழுமாறு செய்கின்றேன் பாரும். இல்லையேல் நானும் ஒரு பிர்ம்ம ரிஷியல்ல.

நார. அடாடாடா! நாராயண! நாராயண! இதென்ன இவ்வளவு கொடிய சபதம் செய்தீர். மித்திரரே! எய்தவன் ஒருவன் இருக்க அம்பை நோவதில் என்ன பயன்? லோக குருவாகிய வசிஷ்டரன்றோ அவன் கூறியதற்கு காரண கர்த்தர். ஒருவன், உலகில் தக்க பதவியில் இருந்தால், ஏனையோர் அவனை வியத்தலும் பணிதலும் இயற்கை. வசிஷ்டர் வெகு காலமாகப் பிர்ம்ம ரிஷிப் பதவியிலிருப்பதால் அவரை முதலாக வைத்து ஏனையோரையும் வணங்கினன்

சகுந்தன். இதில் அவன் என்ன பெரும் தவறிழைத்தான் ? கேவலம் மாயை வசப்பட்ட அவனைக்கண்டு பரிதாபம் கொள்ளவேண்டியதை விடுத்து அவன்மேல் தாம் பெருங்கோபம் அடுத்து கடுஞ் சாபம் கொடுத்தீரே என்பதை நினைக்கும் பொழுதுதான் பரிதாபமாகத் தோன்றுகிறது. நானும் ஏதோ விளையாட்டாக உரைக்க நீர் அதனை விபரீதமாகவன்றோ செய்து விட்டீர். ஏது நீர் செய்த சபதம் மிகவும் கொடிது. அதனை நிறைவேற்ற நம்மால் முடியுமென்று நான் நினைக்கவில்லை.

விசு. நாரதரே ! உம்முடைய கலகத்தை நம்மிடம் கூடவா ஆரம்பித்தீர் ! வாளாயிருந்த என்னைக் கடுங்கோபத்திற்குள்ளாக்கி, மீளாக்கலகத்தைச் செய்ததுமின்றி, தாளாது நான் செய்த சபதத்திற்குக் கோளாறு கூற உமது நா எப்படி இடம் கொடுத்தது. முனிவரே ! நான் செய்த சபதம் நிறைவேறுகின்றதா இல்லையா என்பதை நாளை இரவு நிரூபிக்கின்றேன் பாரும் ஆஹா என்னை யாரென நினைத்தீர்·

நார. கௌசிகரே! க்ஷத்ரிய வம்சத்திலிருந்து பிர்ம்ம ரிஷி பதவிக்குவந்தும் உமக்கு இன்னும் அனுபவம்போதாது. உமது நிலைமையை நீர் இன்னும் உணரவில்லை. பாவம் !குற்றமறியாதவனும் நிரபராதியுமான சகுந்தனையோ கொல்ல நினைத்தீர் ! அத்தகைய செய்கையைச் செய்ய ஒருக்காலும் உம்மால் ஆகாது. இதுவே நாரதனின் வார்த்தை !

விசு என்ன தெரிவித்தீர் ! என் சபதமும் பொய்யாகுமோ !

நார. ஏன் வீண்பேச்சுப் பேசுகின்றீர். முன்பு தேவேந்திரன் சபையில் “ அரிச்சந்திரனைப் பொய் பேசும்படி செய்விக்கிறேன் ” என்று சொன்ன அந்த நாவுதானே இப்பொழுது இந்தச் சபதமும் செய்தது.

விசு. என்ன புகன்றீர் ! பழைய விசுவாமித்திரன் என்று எண்ணிவிட்டீர் ! நான் காதி புத்திரன் என்பது உண்மையாயின் பிர்ம்மரிஷி என்பது சத்தியமாயின், தர்ம நெறி தவறு

தாசரதியின் குரு என்பது உறுதியாயின், நாளை அஸ்த மனத்திற்குள் சகுந்தனின் சிரம் என் பாதத்தில் வீழுமாறு செய்கின்றேன். இல்லையேல் நான் என் தவப்பலனை இழந்தவனாவேன்.

நார.- நான் பிர்ம்ம புத்திரன் என்பது உண்மையாயின் பிர்ம்ம ரிஷி என்பது சத்தியமாயின், கலகத்தால் நலம் விளைவிப்பவன் என்பது உறுதியாயின், சகுந்தனைக்காத்து இரக்ஷிக்கிறேன். இது சத்தியம். (விசுவாமித்திரர் கோபத்துடன் பார்த்து உள்ளே செல்லுகிறார்.)

பரந். நான் என் பெற்றோர்களின் பிள்ளை என்பது உண்மையாயின், கோபத்தில் என் குருவை நிகர்த்த சிஷ்யன் என்பது சத்தியமாயின், படிப்பில் சற்றும் துடிப்பில்லாப் பாரந்தாமன் என்பது உறுதியாயின், மறந்தேன் இச்சுவடியை. (சுவடியை எறிந்துவிட்டு விரைந்து ஓடுகிறான்.)

நார. பேஷ்! இன்று நல்ல கலகம் .... விசுவாமித்திரரே! உம்முடைய கர்வத்தை அடக்க எப்பொழுது சமயம் வாய்க்குமென்று காத்துக்கொண்டிருந்தேன். என் அதிர்ஷ்ட வசமாக இன்று அகப்பட்டீர். அந்தோ பரிதாபம் நிரபராதியான சகுந்தன் நம்மை வணங்கியதற்கு இதுவோ தண்டனை. சீ! நமது சிறிய கலகம் பெரிய வேலை செய்யும் போல் தோற்றுகின்றது. இருக்கட்டும்! தக்க ஏற்பாடு செய்வோம். (செல்லல்)

[இரண்டாங் களம் முடிகிறது.]

களம் 3.

இடம் :— வனத்தின் இடையே உள்ள ஓர் கூடாரம்.

காலம் :— மாலை.

நடர் :— சகுந்தன், நாகன், நாரதர், முதலானோர்.

[நாகன் கூடாரத்தின் முன் யோசனையுடன் நிற்றல்.]

நாக. ஆ ! நல்ல வேளை. எதிர்பார்த்தபடி நம் அரசரும் இதோ வருகிறார். (வணங்கி) அரசே ! தங்களுக்கு ஏன் இவ்வளவு நேரம் ?

சகு. அதன் விபரத்தைப் பின்னர் உரைக்கின்றேன். எங்கே நமது வேடுவர்கள் ?

நாக. மகராஜ் ! நான் தங்களை விட்டுப்பிரிந்து வரும் வழியில் நமது வேடுவர்களைச் சந்தித்து, இவ்விடத்திற்கு அழைத்து வரும்பொழுது இரண்டு முரட்டுக் காட்டெருமைகளைக் கண்டேன். அவைகளை அப்படியே விட்டு விட்டால், எங்கு நம்மை இரவில் தொந்தரவு செய்கின்றனவோ எனப் பயந்து, அவைகளை எப்படியாவது கொன்று வருமாறு அவர்களை அனுப்பியிருக்கிறேன். அரசே ! தங்களுக்கு ஏன் இவ்வளவு நேரம் ?

சகு. நீ என்னை விட்டு நீங்கியவுடன், நான் மீளவும் அப் புள்ளி மானைத் தேடிச்சென்றேன். அப்படிச் செல்லுங்கால் சில தபோ நிதிகள், அக்காட்டின் ஓர்பாகத்தில், நிஷ்டையில் இருந்ததைக்கண்டு, சந்தோஷங்கொண்டு, அவர்கள் நிஷ்டைக்கு பங்கம் வராது வணங்கிவந்தேன். .... ஹா ! இதென்ன இக்கொடும் அடவியில் யாழின் ஒலி கேட்கின்றது—ஆ ! ஆ !! அறிந்தேன். இது என் குல குருவாகிய நாரதப்பிர்ம்மத்தின் யாழின் ஒலியே ! நாகா ! சீக்கிரமாக அதிதி பூஜைக்கு வேண்டிய பாத்திரங்களைக்

கொண்டுவா— (நாகன் உள்ளே சென்று அர்க்யபாத்திரங்களைக் கொண்டு வருதல்)...இதென்ன ! என்றுமில்லாதபடி என் இடது கண் துடிக்கின்றது. ஐயோ ! நமக்கு என்ன கஷ்டம் ஏற்படப் போகின்றதோ ! சீ! எது எப்படியிருந்த போதிலும் நம் குருநாதரின் திவ்ய தரிசன மகிமையினால் நம் வினையானது பாஸ்கரனைக்கண்ட பனிபோல் பறந்து விடும். (நாரதர் பிரவேசிக்க அவரை எதிர்கொண்டு ஓடி) ஸத்குருவே ! வரவேண்டும். இதோ இவ்வாசனத்தில் அமரவேண்டுகின்றேன். (நாரதர் ஒன்றும் பேசாது அமர, சகுந்தன் அதிதி பூஜைசெய்து நமஸ்கரித்தல்)

நார. தீர்க்காயுஷ்மான்பவது ! (திடீரெனக் குதித்து எழுந்து) அடாடா ! என்ன பிழை செய்தேன்.

சகு. பிரபோ ! இதென்ன ! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை தாங்களாவது, பிழை செய்யவாவது !

நார. சகுந்தா ! யாவும் உன்னால் வந்ததே. அட்டா ! மறதியாகவன்றோ உன்னை ஆசீர்வதித்து விட்டேன். எனினும் அது நற்பயன் அளிக்காது என்றே நினைக்கின்றேன்.

சகு. முனிவர் திலகமே ! பாவியேனை இவ்வாறு ஏன் பரிசோதிக்கின்றீர். ஹே இரட்சகா! நான் ஏதாவது பிழை செய்திருந்தால் அதை மன்னித்து ஆட்கொள்ளவேண்டியது, தம்போன்றவரின் கடமையன்றோ. ஆதலின் அடியேன் என்ன குற்றமிழைத்திருந்த போதிலும், மன்னித்து முழு மனதுடன் ஆசீர்வதிக்க வேண்டுகின்றேன்.

நார. இராஜனே ! நீ செய்த பிழையோ பெரிது ! எனவே உன்னை ஆசீர்வதிப்பதும் அரிது.

சகு. குருநாதா ! பிழையா ? நானா? அந்தோ ! தாம் கூறுவது. என் நெஞ்சத்தைக் கலக்குகின்றதே ! அடியேன் செய்த பிழை யாதோ ?

நார. சகுந்தா! பல சாஸ்திரங்களை நீ கற்றிருந்தபோதிலும், உனக்கு முன்யோசனையே கிடையாது. அறியாத் தன்மையினாலோ, அல்லது செருக்கினாலோ நீ இரண்டொருவார்த்தைகள் சொல்லப்போக, அவைகள் உன்னை எவ்வளவு கொடிய சாபத்திற்குள்ளாக்கி இருக்கின்றனதெரியுமா!

சகு. சாபமா? அட பாபமே! ஏ புருஷோத்தமா! சாபம் தொடருமாறு பாபம் யான் யாது புரிந்தேன்? சாற்ற வேண்டும் கிருபைகொண்டு.

நார. சற்று முன்பு விசுவாமித்திரர் ஆசிரமத்திற்கு வந்திருந்த ரிஷிகளை, நீ யாது வார்த்தை சொல்லி வணங்கினை.

சகு. (யோசித்து) "வசிஷ்டாதி முனிவர்களுக்குச் சகுந்தன் நமஸ்காரம்'' எனக்கூறி மனதார வணங்கிவந்தேன். இதில் என்ன பிழைசெய்தேன்?

நார. அதனில்தான் பிழைசெய்து விட்டாய். சகுந்தா! கற்றறிந்த நீயோ அவ்விதம் உரைப்பது. வசிஷ்டரைப் போன்ற பல பிர்ம்மரிஷிகளும், முனிசிரேஷ்டர்களும், அச்சபையின் கண் வீற்றிருக்க, வசிஷ்டரை மாத்திரம் முதன்மையாக வைத்து வணங்கலாமா? அதனால் பிடித்தது பெரியசாபம்.

சகு. தவமுனியே! நான் அப்பெரியார்களை ஆத்மப் பிரதக்ஷணம் செய்த பின்னர், அச்சபையைப்பார்த்த பொழுது பல ரிஷிகளுக்கும் நடுவே பிர்ம்ம ரிஷியான வசிஷ்டரைக் கண்டேன். உடனே என்னையும் அறியாது என் நாவில் அவ்வார்த்தைகள் உற்பத்தியாயின. இதனால் நான் அவரை உயர்த்தியும் ஏனையோரைத் தாழ்த்தியும் கூறினேன் எனத்தாம் கோபித்தல் தகுமோ?

நார. நான் இதை பொருட்படுத்தவில்லையப்பா. சமீபத்தில் பிர்ம்மரிஷியான விசுவாமித்திருக்கன்றோ வந்து விட்டது பெருங் கோபம்?

சகு. என்ன! விசுவாமித்திருக்கா நான் அபராதத்தைச் செய்தேன்! ஸ்ரீ ராமகுருவான அவர், இந்த அற்ப விஷயங்களையெல்லாம் ஓர் பொருட் படுத்தமாட்டாரே. ஹா குருவே! அவரை என் மனதார யானோ தாழ்த்திப் பேசுவேன்........ பிரபோ! அவர் கொடுத்த சாபமென்னவென்று தயை செய்து தெரிவிக்கவேண்டுகின்றேன்.

நார. அப்பா! அதைச்சொல்ல மனம் எழவில்லை. — என்ன செய்வது! உண்மையைச் சொல்லி விடுதலே நலம். சகுந்தா! நாளைக்கதிரவன் மேற்றிசை விழுமுன்னர் உன் சிரம் தம் பாதத்தில் விழுமாறு செய்வதாகக் கடுஞ் சபதம் செய்திருக்கின்றனர் விசுவாமித்திரர்

சகு. சிவா! நாராயண! குடிகளின் பயிர்பச்சைகளுக்கு விலங்குகளினால் துன்பம் நேரிடா வண்ணம் பாதுகாக்க வேட்டைக்கு வந்ததற்கோ இத்தண்டனை! அந்தோ! இருந்தும், விசுவாமித்திரரின் சாபத்திற்கா உள்ளாகி இறக்கவேண்டும். ஆ குருவே! பெரியார் கோபத்திற்குப் பாத்திரனை யான் இவ்வுலகில் வாழ்தலைக் காட்டிலும் இறத்தலே நலம். ஆதலின் எனக்கு விடையளியுங்கள். நான் அருகில் உள்ள மலையிலிருந்து வீழ்ந்து உயிரைப் போக்கிக் கொள்கின்றேன்.

நார. சீ! இனியும் நாம் இவனைச் சோதித்தல் கூடாது-சகுந்தா! அறிஞர்கள், அரசனை உயிராகவும், பிரஜைகளை உடலாகவும் புகல்கின்றனர். ஆதலின் நீ அநியாயமாக இறந்திடில் நின் செங்கோலின் கீழ்வாழும் குடிகளுக்குத் தீங்கிழைத்தவனாவாய். உன் இராஜ்ஜியமும் அழியும். ஆதலின் உன் பொருட்டு அல்லாவிடினும் உன் பிரஜைகளின் பொருட்டாவது நீ உயிர் வாழவேண்டியது அவசியமும் கடமையும் ஆகும் அல்லவா.

சகு. ஸ்வாமி! தாங்கள் கூறுவது உண்மைதான். ஆயினும் விசுவாமித்திரரின் சாபத்திலிருந்து தப்பினாலன்றோ நான் உயிர்வாழமுடியும்! அதற்குத் தாம் தான் ஒரு மார்க்கம்

அடியேனுக்குக் கூறவேண்டுகின்றேன்.

நார. அதற்கு என்னைத்தான் பார்த்தனையோ?

சகு. குலகுருவே! தாங்கள் மனமுவந்தால் நான் உயிர் தப்புவதும் பெரிதோ. (காலைப்பிடித்து) ஸ்வாமி! தாம்தான் அடியேனைக் காப்பாற்ற வேண்டும். தம்மைத் தவிர எனக்கு வேறு கதியில்லை.

நார. இதென்ன கஷ்டம். அப்பா! என்னால் மாத்திரம் இது முடியக்கூடிய காரியமல்ல. ஆயினும் நீ இப்படிச் செய்தால் ஒருக்கால்—

சகு. பிரபோ! தாம் காலால் இட்டவேலையைத் தலையால் செய்யக்காத்திருக்கின்றேன். ஆனால் நான் உய்யும் வழியை உடனே தெரிவியுங்கள்.

நார. (யோசித்து) சகுந்தா! இதோ! இப்பக்கமாகச் சென்றால் அஞ்சனமலையை அடைவாய். அவ்விடத்தில் வீர ஹநுமானின் தாயாகிய அஞ்சனாதேவி நிஷ்டையிலிருக்கின்றனர். மெல்ல அவர்களை அணுகி மும்முறை வலம் வந்து வணங்கி "தாயே ஆதரவற்ற அடியேனுக்கு அபயமளிக்கவேண்டும்" என ஓலமிடு. மற்றவைகளை யான் பார்த்துக் கொள்கின்றேன். ஓடு சீக்கிரம்.

சகு. இதோ ஓடுகின்றேன். பிரபோ! இந்த யோசனை சொல்ல இவ்வளவு நேரம் என்னைத் துன்பத்திற்குள்ளாக்க வேண்டுமா?

நார. அப்படியல்ல சகுந்தா! இப்பொழுதுதான் உனக்கு நல்லவேளை கிட்டியது. ஓடு சீக்கிரம். அதிர்ஷ்டம் உன்பக்கம்தான்.

சகு. தாங்கள் என்னுடன்—

நார. அடபைத்தியமே! கால தாமதம் செய்யாதே. நான் எப்பொழுதும் உன் அருகில் இருப்பேன். நம்பு என் சொல்லை.

சகு. சந்தோஷம். (நமஸ்கரித்து) ஏ நாகா! (நாகன் பிரவேசித்தல்.) உடனே மற்ற வேடுவர்களை அழைத்துக் கொண்டு, நமது நகரத்திற்குச் செல். நான் ஒரு பெரியாரை தரிசித்து வருகின்றேன். புறப்படு சீக்கிரம்.

நாக. உத்திரவு! அரசே (வணங்கிச் செல்லல்.)

சகு. குருவே! உமது பாதமே துணை—யான் செல்கின்றேன் அஞ்சனாதேவியிடம். (சகுந்தன் ஓடுதல்.)

நார. ஓடு. (நகைத்துக்கொண்டே) மானிடர்களுக்கு இவ்வுயிரின் மேல் எவ்வளவு ஆசை! ஆம் இது மாயை! விசுவாமித்திரரே! ஐம்புலங்களையும் அடிமைகொண்ட பிர்ம்ம ரிஷியாகிய தம்மை மாயைக்கு அடிமைப் படுத்தி விட்டீரே! ஆயினும் அதினின்றும் உம்மை விரைவில் மீட்பேன்.

[மூன்றாம் களம் முடிகிறது.]

களம். 4.

இடம் :— அஞ்சனமலையில் ஓர் பர்ணசாலை.

காலம் :— முன் இரவு.

நடர்:— அஞ்சனாதேவி, சகுந்தன், நாரதர், ஹநுமான் முதலானோர்.

(அஞ்சனாதேவி, ஓர் கற்பாறையில் நிஷ்டையில் அமர்ந்திருத்தல் **ஹநுமான்** பிரவேசித்து, அவர்தம் திருவடிகளைப் பூசித்து வணங்கல்.)

அஞ். (விழித்து) குழந்தாய்! நீ சிரஞ்சீவியாக வாழ்வாய். ஸ்ரீ ராகவனைப் பிரிந்து என்னிடம் இவ்வளவு விரைவில் வந்ததின் காரண மென்ன?

ஹநு. தாயே! இப்பொழுதுதான் என் ஐயன் இரவு போஜனம் செய்யச் சென்றார். தவிர இன்று சீக்கிரமாக தங்களைக்காண வேண்டுமென்ற அவாத் தோன்றியதால் அவரிடம் அனுமதிபெற்றுத் தம்மிடம் வந்தேன்.

அஞ். செல்வனே! நீயே ஸத்புத்திரன்! உன்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் உடல் பூரிக்கின்றது. மனம் பரவசமடைகின்றது. இப்படி வா என் அருகில். (ஹநுமான் அருகில் வந்து வணங்க.) குழந்தாய்! பிரளயகாலம் வந்தாலும் உன் கீர்த்தி அழியாது எங்கும் பரவுக! மேலும் நீ என்றும் அழியாத, வஜ்ர சரீரியாய் விளங்குவாயாக! .... நன்று! குழந்தாய்! ஸ்ரீ ராமனின் அன்பு மென்மேலும் வளரப் போதிய பணி விடை செய்து வருகின்றனையா?

ஹநு. என் அருமைத்தாயே! அப்பெருமான் என்னிடம் கொண்டிருக்கும் தலையன்பிற்கு, நான் இதுகாறும் செய்த பணிவிடைகள் மிகவும் அற்பமானவை என்று நினைத்தே, இன்னும் பணிவிடை செய்து மகிழ்வதற்கு, இவ்வுடலைத் தாங்கி நிற்கின்றேன்.

அஞ். குழந்தாய்! மிகவும் சந்தோஷம். சரி நேரமாயிற்று, நீ இராகவனிடம் செல்.

ஹநு. அம்மா! அப்படியே சென்று, பிராதக்கால தரிசனத் திற்கு வருகின்றேன். (வணங்கிப்பாய்ந்து செல்ல, அஞ்சனை புன்னகை புரிந்து நிஷ்டையிலிருத்தல்— சகுந்தனும் நாரதரும் பிரவேசித்தல்.)

நார. ஓ சகுந்தா! மகா தபஸ்வினியாகிய, அஞ்சனாதேவி நிஷ்டை யில் இருக்கின்றார்கள். இவர்களால் தான் உன் காரியம் சுபகரமாக முடியவேண்டும். ஆதலின் காலதாமதம் செய்யாது நான் தெரிவித்தபடி சீக்கிரம் நட. நான் அருகில் மறைந்து நிற்கின்றேன். (மறைதல்)

சகுந். குருவே! தாங்கள் உரைத்தபடியே செய்கின்றேன் (அஞ்சனாதேவியை வலம் வந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து தாயே! ஆதரவற்ற அடியேனைக் காப்பாற்றவேண்டும் அபயம்! அபயம்!! அபயம்!!!

அஞ். (விழித்து) தீர்க்காயுஷ்மான் பவ!

நார. (ஓடிவந்து) அடடா! அவசரப்பட்டு விட்டீர்களே!

அஞ். யாரது! ஓகோ நாரதரா! வரவேண்டும்.

நார. தாயே! நமஸ்கரிக்கின்றேன்.

அஞ். தீர்க்காயுஷ்மான் பவ! நாரதரே! நான் இவனை

ஆசீர்வதிக்கும்பொழுது தாம் ஏன் தடைசெய்ய நினைத்தீர்?

நார. தேவீ! அதன் உண்மையை அவனையே கேட்க வேண்டு கின்றேன்.

அஞ். நாரதரே! ஏதாவது விஷமம் உண்டோ இதனில்? இருக் கட்டும். அப்பா நீயார்? என்னை வணங்கி அபயம்

பெற்றதின் காரணமென்ன. பயப்படாதே சொல்.

சகு. என் தாயே! அடியேன் காஞ்சனபுரத்தரசன் — சகுந்தன் என்னும் துர்ப்பாக்கியமான பெயரைப்பெற்றவன். தாயே! அடியேன் இன்று மாலையில், வேட்டையாடிவரும் வழியில், விசுவாமித்திரர் ஆசிரமத்தில், • வசிஷ்டர், குத்ஸர், ஆங்கீரசர், நாரதர், முதலிய பல முனிவர்கள் நிஷ்டையில் இருக்கக்கண்டேன். கண்டதும், அவர்கள் நிஷ்டையைக் கலைத்து ஆசி பெறலாகாது என நினைத்து, அவர்களை ஆத்மப்பிரதக்ஷணம் செய்து, வசிஷ்டாதி முனிவர்களுக்குச் சகுந்தன் நமஸ்காரம், எனத்தெரிவித்து வணங்கி, அடியேனது தந்தையிடம் வந்தேன். அடியேன் கூறிவந்த சொற்கள் தம்மை மிகவும் வேதனைக்குள்ளாக்கி விட்டதென்று நினைத்து, விசுவாமித்திரர், நாளைக் கதிரவன் மேற்றிசையில் விழுமுன், அடியேன் சிரம், தம் பாதத்தில் விழும்படி செய்வதாகச் சபித்தனராம். அதனைக் கேட்டதும், அஞ்சி, அடியேன் தம்மிடம் ஓடிவந்து அபயம் பெற்றேன்.

நார. அப்பா! சர்வ வல்லமைவாய்ந்த அஞ்சனாதேவியின் ஆசியைப்பெற்ற உனக்கு இனியாதும் குறைவு இல்லை.

அஞ். விசுவாமித்திரர் உன்னைச் சபித்ததாக உன்னிடம் தெரிவித்தது யார்?

சகு. அடியேனது குரு நாரத முனிவர்.

நார. தாயே! அதனால்தான், நான் வரும்பொழுதே "அவசரப் பட்டு விட்டீர்களே" என்றேன்.

அஞ். ஓகோ! அப்படியா! நன்று. அரசனே! என்னிடத் திற்கு வரும்படி உன்னைத் தூண்டியவர் யாவர்?

நார. அட நாராயண! நம் சூட்சி வெளிப்பட்டுவிட்டதே— அன்னையே! மன்னிக்கவேண்டும். சகுந்தன்மேல்

இரக்கங்கொண்டு யானே அவனைத் தம்மிடம் அனுப்பினேன். அதற்குள்ளாகத் தாங்கள் அவசரப்பட்டு....

அஞ். (புன்னகையுடன்) நாரதரே! நினைத்தேன். நினைத்தேன். உமது விருப்பப்படியே, நான் கொடுத்த வாக்கின்படி சகுந்தனைக்காப்பாற்றுவேன். இது உண்மை.

நார. தேவீ! மிகவும் சந்தோஷம். நமஸ்காரம். யான்சென்று வருகின்றேன். (சகுந்தனைப் பார்த்து) சகுந்தா! இனி நீ கவலைப் படவேண்டாம். அஞ்சனாதேவி சொற்படி நடந்து கொள். நான் சென்று வருகிறேன்.

சகு. தங்கள் சித்தம்! (வணங்கல்)

நார. நம் கவலை தீர்ந்தது. இனி விசுவாமித்திரரின் செய்கையை அறிவோம். (செல்லல்)

அஞ். சகுந்தா! நேரமாகிவிட்டது. இதோ தோன்றும், என் ஆசிரமத்திற்குட் சென்று, அங்கு வைத்திருக்கும் பழங்களைப்புசித்த பின்னர், நித்திரைசெய். அங்கு உனக்கு ஒரு ஆபத்தும் வாராது. செல் அங்கே.

சகு. உத்திரவு தாயே! (வணங்கி ஆசிரமத்திற்குட் செல்லல்.)

[நான்காம் களம் முடிகிறது.]

களம் 5.

இடம்:—இராமபிரானின் அந்தப்புரம்.

காலம்:—நடு நிசி.

நடர்:—இராமபிரான், ஸீதாதேவி, ஹநுமான், விசுவாமித்திரர்.

[இராமபிரான் அழகிய பஞ்சணையில் இருக்க ஹநுமான் அவர் திருவடிகளை வருடிக்கொண்டிருக்கிறார். சின்னேரஞ்செல்ல, ஸீதாதேவி பதைபதைப்புடன் அங்கு வந்து, ஹநுமானையும் ஸ்ரீராமபிரானையும், மாறி மாறிப் பார்க்க ஹநுமான் துள்ளிக் குதித்து எழுந்து, தேவியை வணங்கிச் செல்லல்.]

இரா. கண்ணே! ஸீதா! என்ன விசேஷம்? ஏன் இவ்வளவு பரபரப்பு.

ஸீதா. நாதா! சற்று முன்னர் நான் ஓர் விபரீதமான கனவு கண்டேன். ஆதலால் தங்களிடம் ஓடி வந்தேன்.

இரா. அக்கனவு யாதோ!

ஸீதா. நமது மாருதியும் தாமும் யுத்தம் செய்வதாகக் கனவு கண்டேன்.

இரா. (புன்னகையுடன்) பேஷ்! நல்ல கனவு! நானாவது மாருதியுடன் யுத்தம்செய்வதாவது!

ஹநு. (வெளியில் நின்று) பிரபோ! அடியேன் அங்கு வரலாமோ?

இரா. மாருதி! சீக்கிரமே வா. (ஹநுமான் பிரவேசித்தல்.)

ஹநு. என் ஐயனே! இக்கொடிய இரவில் தமது குரு விசுவாமித்திரர் தம்மைக் காண வந்திருக்கின்றார்.

இரா. அப்படியா! ஸீதா! உட்சென்று குருபூஜைக்கு வேண்டிய பாத்திரங்களை உடனே கொண்டுவா. (ஸீதை உட்செல்லல்) மாருதி! அவரைச் சீக்கிரமாக அழைத்துவா. (ஹநுமான் செல்லல்) இதென்ன வியப்பாக வன்றோ இருக்கிறது! என் குரு நாதர் இந்நேரத்தில் இங்கு வரவேண்டிய காரணம் என்ன! (ஸீதா தேவி பூஜைப்பாத்திரங்களுடன் பிரவேசித்தல்) ஒன்றும் விளங்கவில்லையே. — (ஹநுமான் விசுவாமித்திரரை அழைத்து வந்த பின்னர் வெளியே செல்கிறார்— ஸ்ரீராமன் நமஸ்கரித்து)வரவேண்டும்! வரவேண்டும். குருநகராஜ! இவ்வாசனத்தில் அமரவேண்டும் (விசுவாமித்திரர் ஒன்றும் பேசாது குறிப்பிட்ட ஆஸனத்தில் அமர, ஸ்ரீராமன் பாதபூஜை செய்து மனைவியுடன் வணங்கல். விசுவாமித்திரர் ஆசி கூறாது மௌனமாயிருத்தல்)—சப்தகோடி மந்திரங்களையும் அடியேனுக்குபதேசித்த ஸத்குருவே! நமஸ்கரிக்கின்றேன்— இது என்ன, மௌனம் சாதிக்கின்றார்—முனிவர் திலகமே! திரிகரண சுத்தியாய் வணங்கும் எங்களை ஆசீர்வதிக்காது மௌனம் சாதிப்பதின் மர்மம் என்னே!- ஆ! இதென்ன விபரீதம்! பிரபோ! பிறந்தது முதல் ஒருபத்தினி, ஒரு பாணம், ஒருசொல், என்ற கொள்கைகளில், சிறிதேனும் தவறுமல் நடந்துவரும் என்மேல், என்ன குற்றமுண்டோ தெரிவித்தால், திருத்திக்கொள்கிறேன். தயை செய்து என்மேல் இரங்கி ஆசி கூற வேண்டுகின்றேன்—ஒகோ மனதில் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு நம்மை இப்படி வருந்தச்செய்கிறார்—இருக்கட்டும். இவரை எப்படியும் திருப்தி செய்யவேண்டியது நமது கடமை—குருநாதா! தமது அடிமையாகிய யான் செங்கோல் செலுத்தி வருகையில் எத்தகைய குறையும் தமக்கு உண்டாகக் காரணமில்லையே. "அடுத்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்றபடி தமது முகம் சஞ்சலத்தை யன்றோ தெரிவிக்கின்றது. பிரபோ! யான் என்ன செய்யவேண்டும். தமக்குத்துயர் இழைத்த பாவி யாவன் என்பதையறிவித்தால், அவனைத்தண்டித்து தமது துயரை இப்பொழுதே தீர்க்கின்றேன். இது ஸத்தியம்.

ஸீதா. ஸ்வாமி ! இனியாவது எங்கள்மேல் இரக்கம் கொள்ள வேண்டுகின்றேன்.

விசு. (புன்னகையுடன்) தீர்க்க சுமங்கலீபவ ! தீர்க்காயுஷ்மான்பவ! ஏ இராமா ! எழுந்திரு ! இப்பொழுதுதான் உன்னை என் சிஷ்யனுகப்பெற்றதின் பலனை அடைந்தேன். இனி என் கவலைகள் நீங்கின.

இரா. ஸ்வாமி ! தங்களுக்கு நேர்ந்த துன்பம் என்ன? தயை செய்து தெரிவித்தால் அதனைப் போக்கி விடுகின்றேன்.

விசு. மிகவும் ஸந்தோஷம் ! இராமா ! உனக்குக் காஞ்சன புரத்து அரசன் சகுந்தனைத் தெரியுமல்லவா.

இரா. நன்றாகத்தெரியும். அவன் நம்மிடம் மிக்க அன்பும், மரியாதையும் கொண்டவன். மனு நீதி தவறாது மாட்சிமையுடன் ஆட்சி புரிபவன். மேலும்—

விசு. ஏ இராமா ! அவன் அன்பைப்பற்றியும், ஆட்சியைக் குறித்தும், நான் உன்னிடம் அறிய வரவில்லை. அவன் நல்ல விவேகி அல்லனென்றே உன்னிடம் உரைக்க வந்தேன். இல்லையேல் என்மனம் புண்படும்படி அவன் செய்வானு?

இரா. தங்கள் மனம் புண்படும்படியாக அவன் செய்ததென்ன?

விசு. என் மனம் மாத்திரமா ? குத்ஸர், கௌதமர், காசியபர், நாரதர் முதலிய பல முனிவர்களும் மனம் வருந்தும்படி செய்துவிட்டான். அப்பொழுதே நான் அவனைப் பஸ்மீகரப் படுத்தியிருப்பேன். ஆயினும் என் தவத்தின் பலன் குன்றி விடும் என்றஞ்சியே உன்னிடம் வந்தேன்.

இரா. என்ன ! சகுந்தனு அவ்விதம் செய்தான்? மிகவும் நல்லவனுயிற்றே ! அவ்விதம் செய்யமாட்டானே !

விசு. என்ன கூறினை— இராமா ! அப்படியாயின் என்னைப் பொய்யன் என்று நினைத்தனை !

இரா. ஸ்வாமி ! குற்றமாகக் கொள்ளல் ஆகாது. தங்கள் வாக்கினின்றும் அஸத்தியம் வருமோ ! ஒருபோதும் இல்லை. பிரபோ ! சகுந்தனை இதுகாறும் உத்தமன் என்றல்லவோ நினைத்திருந்தேன். அதுபோகட்டும். அவன் புரிந்த குற்றம் யாதென்று விளங்கச்சொல்ல வேண்டுகின்றேன்.

விசு. குற்றமா! பல முனிவர்கள் நிறைந்த ஓர் சபையில் பொதுவாக வணங்கவேண்டியதை விடுத்து, செருக்கினாலும் வெறுப்பினாலும், ஒரு முனிவரை உயர்த்தியும் மற்றவர்களை தாழ்த்தியும் வணங்கினான்.

இரா. யாரை உயர்த்தி வணங்கினான் ? தயைசெய்து விளங்கச் சொல்லவேண்டும்.

விசு. இராமா ! நானும் ஓர் பிர்ம்மரிஷி எனக்கருதாது, சகுந்தன், என்னை அச் சபையில் அலக்ஷியம் செய்து வேறு ஒரு பிர்ம்மரிஷியை மாத்திரம் முதன்மை வைத்து வணங்கிச்சென்றான். அதனால் நான் மனம் தாளாது "நாளைக்கதிரவன் மறையுமுன் அவன் சிரம் என் பாதத்தில் வீழுமாறு செய்கின்றேன்" எனச் சபதம் செய்து, அச் சபதத்தை நிறைவேற்ற உன்னிடம் வந்தேன். உன்வாக்குறுதியையும் பெற்றேன். இனி என் சபதம் பொய்யாகாமலும், உன் சொல் பாழ் ஆகாமலும் முடிக்க வேண்டியது உனது கடமையாகும். (செல்ல எத்தனித்தல்.)

இரா. ஸ்வாமி ! கொடுத்த வாக்கை நான் தவறுபவன் அல்லன். ஆயினும் இதற்கு வேறு ஒரு மார்க்கமில்லையோ !

விசு. இராமா ! எவ்வழியாயினும் சரி, என் சபதம் நிறைவேற்றப் படவேண்டும். நேரமாகின்றது, நான் வருகின்றேன். (ஸ்ரீராமனையும் ஸீதாதேவியையும் ஆசீர்வதித்து வேகமாகச் செல்லல்)

இரா. ஆ! இதென்ன விபரீதம். (வருத்தத்துடன் அமர, ஹநுமான் பிரவேசித்தல்)

[ஐந்தாம் களம் முடிகிறது.]

களம் 6.

இடம்:— விசுவாமித்திரரின் ஆசிரமம்
காலம்:— அதிகாலை
நடர்:—நாரதர், பரந்தாமன், விசுவாமித்திரர்.

(பரந்தாமன் புரண்டு, புரண்டு, தூங்குகிறான். நாரதர் பிரவேசித்து ஆசிரமத்திற்குள் பார்த்துவிட்டு யோசித்தல்)

நார. என்ன விசுவாமித்திரரைக் காணோம்!

பரந். (புரண்டுகொண்டே) அட நாராயணா! இதென்ன இழவு. இன்று கொசுக்கடி உபத்திரவம் பொறுக்க முடியவில்லையே! (நாரதர், இவன் பேசுவதை உற்றுக் கவனித்த வண்ணம் ஓர் பக்கத்தில் மறைந்து நிற்கிறார்.) எனது குருநாதர் ஆசிரமத்தில் இல்லையென்று நீங்கள் இப்படி என்னைத் துன்புறுத்துகிறீர்கள். (உடலை நன்றாகத் துணியினால் போர்த்திக்கொண்டு) இப்பொழுது என்ன செய்வீர்கள்! (ஒரு கட்டை எறும்பு காலைக் கடிக்கக் குதித்தெழுந்து) ஐயையோ! அப்பப்பா! என்ன இழவோ என் காலைக் கடித்து விட்டதே. (எறும்பை நசுக்கிக் கையில் எடுத்து உற்றுநோக்கி) இருட்டில் ஒன்றும் சரிவரத் தெரியவில்லையே—ஓகோ கட்டைஎறும்பா! நல்லவேளை. ஏது, ஆசிரமத்து எறும்புகள் கூட நம்மிடம் சேஷ்டை செய்கின்றனவே! இந்தப்பாழும் எறும்புகள் இவ்வாசிரமத்தை விட்டு நீங்கவேண்டுமென்று, நேற்றுத் தானே விக்கினேசுவாருக்குப் பூஜை செய்தேன்.

(கொசுக்கடித்தல்) அடே சங்கீதக் கொசுக்களே! இதோ உங்களை ஓர்கை பார்க்கின்றேன். (மேல்வேஷ்டியை எடுத்து கொசுவேட்டை ஆடிக்கொண்டே) இப்பொழுது என்ன செய்வீர்கள். ஓடுங்கள், ஓடுங்கள். (நாரதர் மறைந்திருந்த பக்கம் ஓடி அவர் மேல் மோர்துண்டு கீழேவிழுந்து) ஐயையோ! பிசாசு! பிசாசு! (சீக்கிரமாக முகத்தை மூடிக்கொண்டு) ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!

நார. (மறுபக்கமாக ஓடிவந்து) அப்பா! பரந்தாமா! என்ன விசேஷம்? ஏன் இப்படி ஓலமிட்டாய்?

பரந். ஸ்வாமி! நமஸ்காரம். தாங்கள் நல்ல சமயத்தில் வந்தீர்கள். இல்லாவிடில் இறந்திருப்பேன். தங்களைப் போலவே ஒரு பாழும் பிசாசு வந்து என்னைப் பயமுறுத்தியது.

நார. பிசாசாவது! வரவாவது! வீண் மனப் பிரமை. நல்லது விசுவாமித்திரர் எங்கே?

பரந். அவரா! (யோசித்து) அயோத்திக்குப் போயிருக்கிறார்.

நார. அயோத்திக்கா! இதென்ன கஷ்டம்— பரந்தாமா! இராமனிடத்தில் என்ன விசேஷம், உனக்குத் தெரியுமா?

பரந். தெரியும்—ஆயினும் அவ்விஷயத்தை ஒருவரிடமும் கூறலாகாதெனக் குருநாதர் கட்டளையிட்டிருக்கிறார்.

நார. பரந்தாமா! நீ மிகவும் நல்லவன். உன்மீது எனக்கு எவ்வளவு பிரியம் தெரியுமா! இல்லாவிட்டால் நீ கூப்பிட்ட மாத்திரத்தில் இங்கு வருவேனு!

பரந். ஆமாம். ஸ்வாமி! ஸ்ரீராமனிடத்தில் எனக்கு உத்தியோகம் எப்பொழுது வாங்கித்தரப் போகிறீர்கள்?

நார. அநேகமாய் நாளை இராமனைப் பார்ப்பேன். அப்பொழுது உன்னைப்பற்றிப் பேசுகின்றேன்.

பரந். இவ்விஷயத்தை என் குருவுக்கு இப்பொழுது தெரிவிக்க வேண்டாம்.

நார. அதைப்பற்றி நீ பயப்படவேண்டாம்--ஆமாம்--விசுவாமித்திரர் எப்பொழுது இராமனிடம் சென்ருர் ?

பரந். முன்னரே சென்ருர். வரும் சமயமும் ஆயிற்று.

நார. இராமனிடத்தில் அவ்வளவு அவசரமாகச் செல்ல வேண்டிய காரணம் ?

பரந். ஸ்வாமி! தங்களிடம் கூறுகின்றேன். ஆயினும் வேறு ஒருவரிடமும் தெரிவிக்க வேண்டாம்.

நார. இதுதான் எனக்கு வேலையோ?—சீக்கிரமாகச் சொல், நான் செல்லவேண்டும்.

பரந். சகுந்தன் விஷயமாகச் சென்றிருக்கின்ருர்.

நார. அப்படியா ! சரி, நான் சென்று வருகிறேன். (தனக்குள்) ஆகா ! காரியம் கெட்டுவிட்டது. இராமனைப் பிடித்து விட்டார் விசுவாமித்திரர். இராமன் மனது வைத்தால், சகுந்தன் அதோ கதிதான். பிறகு நமது சபதம் என்ன ஆவது?.... சீ! சீ! இனி நாம் சும்மா இருக்கலாகாது. ஏது ! நாம் செய்த கலகம் நமக்கே இடர்தரும் போல் தோன்றுகிறதே. (செல்லல்)

பரந். சரி ! இன்னும் இரண்டொரு நாளில் நமக்கு அரண்மனையில் உத்தியோகம் அகப்படும். உத்தியோகம் ஆகிவிட்டால்— (விசுவாமித்திரர் கோபத்துடன் பிரவேசித்தல்.)

விசு. அடே பரந்தாமா ! அதோ செல்லும் நாரதரிடம் என்ன தெரிவித்தனை ? உண்மையைச் சொல்.

பரந். மன்னிக்கவேண்டும். தாங்கள் ஸ்ரீராமனிடம் சென்ற உண்மையைச் சொல்லிவிட்டேன்.

விசு. சீ! புத்தியில்லாதவனே! நான் அயோத்திக்குச் சென்ற விஷயத்தை அவரிடம் தெரிவிக்கலாமா?

பரங். நான் தெரிவிக்காவிட்டால், எங்கு ஞான திருஷ்டியினால் தானே அறிந்துகொண்டு, பிறகு பொய் சொன்ன குற்றத்திற்காக என்னைச் சபித்து விடுகிறாரோ எனப்பயந்து என்ன சொல்வது எனத் தயங்கினேன், நல்ல வேளையாக அடியேனுக்குத் தேவரீர் அடிக்கடி ஞாபகமூட்டி வரும் ஹரிச்சந்திரன் சரித்திரம் அது சமயம் நினைவிற்கு வர உண்மையைச் சொல்லித் தப்பித்துக்கொண்டேன். இதனில் ஏதேனும் பிழையிருந்தால் சிறியேனை மன்னிக்க வேண்டும். (வணங்குதல்)

விசு. கஷ்டம்! கஷ்டம்! உம்-பரந்தாமா! உன்னை மன்னிக்காமல் என்ன செய்வது! போகட்டும்! இனியாவது கூறும் இரகசியங்களை ஒருவரிடமும் நீ வெளியிடாதே.

பரங். ஸ்வாமீ! மன்னிக்கவேண்டும். ஒருவர் அறிந்தால் இரகசியம், அடியேனைப் போன்றவர்கள் அறிந்தால்— மன்னிக்க வேண்டும்—ஆகவே இனித் தங்கள் இரகசியத்தை ஒருவரிடமும் கூறாது மிகவும் இரகசியமாகத் தாங்களே வைத்துக் கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன். (கீழே விழுந்து வணங்கல்.)

விசு. சீ! எழுந்திரு! அதிகப்பிரசங்கி. இது போது—

பரங். அடியேனை மன்னிக்க வேண்டும்.

விசு. சரி மன்னித்தேன் உன்னை.... இனி ஜாக்கிரதையாக நடந்து கொள். அதிருக்கட்டும். நாரதர் எங்கு செல்லுகிறார் தெரியுமா உனக்கு!

பரங். தெரியாதே! மன்னிக்கவேண்டும்.

விசு. நீ உடனே அவரைப் பின்பற்றி, அவர் எங்கு செல்லுகிறார் என்பதை அறிந்துவா, ஓடு சீக்கிரம்.

பரந். (ஓடிக்கொண்டே) கொசு, எறும்பு, குரு, இவைகளிட மிருந்து சற்றுத் தப்புவோம்.

விசு. நாரதரே ! என் சபதம் இனி நிறைவேறும் என்பதிற் சற்றும் சந்தேகமில்லை .... ஸ்— அ ப் பா டா ! ஆ ! அருணோதயகாலம் வந்துவிட்டது. இனி ஆற்றிற்குச் செல்வோம். (செல்லல்)

[ஆறுங் களம் முடிகிறது]

களம் 7.

இடம்:— அஞ்சனாதேவியின் பர்ணசாலை.

காலம்:— காலை.

நடர்:— அஞ்சனாதேவி, சகுந்தன், நாரதர், ஹநுமான்.

அஞ். (நிஷ்டை கலைந்து).... ஆ ! உலகத்தின் மாயாசக்தி ஒவ்வொருவரையும் என்ன பாடுபடுத்துகின்றது ! பாவம் ! நம்மிடம் அபயம் பெற்ற சகுந்தனின் மனம் நேற்று எவ்வாறு இருந்தது! இப்பொழுது என்ன நிலையில் இருக்கிறது! (சகுந்தன் ஆசிரமத்தினின்றும் வருத்தத்துடன் வெளிவந்து நிற்கிறான்.) ஆ ! இப்பாழும் உடல் கரும வழிப்பட்டுத் தோன்றித்தோன்றி மறைகின்றது அதற்குள்ளாக அதற்கு எவ்வளவு வேதனைகள் உண்டாகின்றன. (ச கு ந் த ன் நமஸ்கரித்தல்.)

சகு. தாயே ! நமஸ்கரிக்கின்றேன்.

அஞ். சிரஞ்சீவியாக வாழ்வாய்.

சகு: அன்னையே ! யான் தங்களுடைய தவத்திற்கு இடையூறாக வந்தனனே, என நினைக்கும் பொழுது என் மனம் மிகவும் சஞ்சல முறுகின்றது. தங்களுக்கு இடர்தரும் இவ்வுடற்

சுமையை நான் போக்கிக் கொள்ள அருள்கூர்ந்து உத்திரவு தரவேண்டுகின்றேன்.

அஞ். அப்பா! நீ இப்பொழுது துன்பத்தினின்று மீளுவதற்கு இப்பிறப்பை நீக்குவதாகச் சொன்னாய். உடனே நீ மறு பிறப்பை அடையும்பொழுது துன்பத்தையடைய மாட்டாயோ! ஆதலின் உண்மை இன்பம் என்பது பிறப்பு நீங்கும்பொழுதே உண்டாகும். ஆதலால் பிறப்பைப் போக்க, இன்பத்தைக யளிக்கவல்ல பரப்பிரம்மத்தினிடம் உன் மனத்தைச் செலுத்தி அருளைப்பெற முயலுவாய். யாவும் இனிது முடியும். கவலைவேண்டாம் (நாரதர் பிரவேசம். பாரந்தாமன் ஒருவருமறியாதவாறு ஓடிவந்து, ஆசிரமத்தின் பின்புறம் மறைந்து கொள்ளுகிறான்.)

நார. தாயே! எதிரியின் செயலைக் கவனித்தால், நம்மை மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாக்கி விடும்போல் தோற்றுகிறதே.

சகு. (நாரதரை நமஸ்கரித்து) ஸ்வாமி! இன்னமும் என்னைச் சோதனை செய்து வீண் கஷ்டத்திற்குள்ளாக்காதீர்கள்.

அஞ். நாரதரே! வீணே அவனை ஏன் வருந்தச் செய்கிறீர்?

நார. அம்மணி! நான் என்ன செய்வேன். காரியமோ முற்றிலும் மாறிவிட்டது. தாங்கள் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்ற முடியும் என்பதை யோசிக்கவே இங்கு வந்தேன்.

அஞ். பிர்ம்ம புத்திரரே! நான் எந்தத் தைரியத்துடன் வாக்குக் கொடுத்தேன் என்பதை மறந்தீரோ.

நார. மறக்க வில்லை. புஜபல பராக்கிரமம் பொருந்திய தங்கள் திருக் குமாரராகிய ஸ்ரீராமதூதனால் தங்களுடைய வாக்கை நிறைவேற்றி விடுவீர்கள் என்பதற்கையமில்லை. ஆயினும், எதிரியின் செய்கைகளைத் தாங்கள் அறிவீர்களேயாயின் மிகவும் சஞ்சல மடைவீர்களென்றே அஞ்சுகின்றேன்.

அஞ். எதிரியா! நாரதரே! அவ்வீரன் யாவன்— தேவனா, அரக்கனா, அல்லது மானிடனா?

நார. தேவி! விசுவாமித்திரர் பிரதம சிஷ்யனும், இராவண சம்ஹாரியுமான ஸ்ரீராமனே!

அஞ். ஆ! என் செல்வனே! (மூர்ச்சித்தல்)

நார. நாராயணா! இச்சமயம் ஹநுமான் வந்தால் நம்கதி என்ன ஆகுமோ!

சகு. ஐயோ! என் பொருட்டு——

நார. உன்பொருட்டு என்ன! இராம மாருதி யுத்தம்தான்.

சகு. இராம மாருதியுத்தமா! ஏன், நான் இறந்தால்.....

நார. சீ! பேசாமலிரு. அஞ்சனாதேவி எழுந்திருக்கிறார்கள்.

அஞ். (எழுந்து) அப்பா குழந்தாய்! நீ யாரைத் தஞ்சமென்றடைந்து அஞ்சலி செய்து வருகின்றாயோ, அவருடனா யுத்தம் செய்ய வேண்டும்! குமாரா! இவ்விஷயம் உன் செவியிற் பட்டால் உன் மனம் என்ன பாடு படுமோ! அறியாத்தனமாகவன்றோ அபயம் அளித்தேன். அதை எப்படியும் நிறைவேற்றுவது எனது பொறுப்பாயிற்றே. நாரதரே! தாம் யாவும் முன்பே அறிந்தும், என்னிடம் கபடமாகச் சகுந்தனை வணங்கச் செய்து அபயம் பெறச் செய்தது முறையாகுமா? தம்முடைய சூழ்ச்சியினாலன்றோ என் புதல்வன் ஸ்ரீராகவனுடன் யுத்தம் புரிய நேரிடுகின்றது. "இராம மாருதியைப் போலன்றோ ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்" என்று உலகோர் இதுகாறும் கூறிவருகின்ற சொல் பொய்யாகி விடும்போல் தோன்றுகிறதே. ஆ! முனிவரே! இராம அபராதிக்கு யான் அபயம் தரும்படிசெய்தீரே! இதற்கு யான் என்செய்வேன்?

நார. தேவீ! ஸ்ரீராமனின் உதவியை விசுவாமித்திரர் பெறுவார் என்பதை யான் சிறிதும் எண்ணவில்லை. எண்ணியிருந்தால் சகுந்தனைத் தங்களிடம் அனுப்பியிருக்கமாட்டேன். தாயே! இது ஈசன்செயல். மகா வல்லமை வாய்ந்த புதல்வரைப் பெற்ற தங்களுக்கு இது விஷயத்தில் கவலை ஏன்? இம் மன்னனைக் காக்கும் திறமை அவருக்கு உண்டு என்பதை நம்புங்கள்.

அஞ். என்ன கூறினீர்? இராமதாஸனாகிய என் செல்வனே இராம அபராதியைக் காக்கவல்லான்! இச்செய்தியை அறிந்தால் அவன் உயிர் நிற்குமா என்பதை யோசிக்கவே அஞ்சுகின்றேன்.

நார. தாயே! அப்படியாயின் சகுந்தனைக்காக்க முடியாது எனத் தெரிவித்து விரட்டி விடலாமே! ஏன் என் மேல் வீண் வருத்தம். அபயம் அளித்தவர் தாங்கள். அபயம் பெற்றவன் சகுந்தன். இனி எனக்கு இங்கு என்ன வேலை! எல்லாம் விதிவசம்.

அஞ். ஆ! யாரை விட்டது விதி! அப்பா சகுந்தா! நீ வருந்தாதே. என் புதல்வன் வரும்நேரம் ஆயிற்று. வந்தவுடன் அவனிடம் தெரிவித்து உன்னைக் காக்க ஏற்பாடு செய்கின்றேன். கலங்காமல் உட்கார் அவ்விடத்தில்.

நார. ஆ! இதென்ன ஆகாயத்தில் சப்தம்— (மேலே பார்த்து) ஆ! மாருதியன்றோ வருகிறார்! சீ! இனி நாம் இங்கிருந்தால், மாருதியின் கோபத்திற்குள்ளாக வேண்டும். ஆதலின் மெல்ல நழுவி விடுதலே நலம். தாயே! நமஸ்காரம். சென்று வருகின்றேன். (நாரதர் வேகமாகச் செல்ல ஒளிந்திருந்த பரந்தாமன் அவர் பின்னால் ஓடுகிறான். ஹநுமான் பிரவேசித்து வழக்கம்போல், தாயின் பாதங்களைப் பூஜித்து வணங்கி, அவரது வருத்தமுற்ற முகத்தை நோக்குகிறார்.)

ஹநு. என் தாயே! மலைகலங்கினாலும் மனம் கலங்காது விளங்கும் தாங்கள் முகவாட்டமுற்றிருப்பதேன்?

ஸ்ரீ ராம பிரானின் நாமம் இவ்வுலகில் உள்ள வரை நமக்குத் தீங்கிழைக்கத் தேவராலும் இயலாதே. அப்படி யிருக்கத் தங்கள் மனம் நோகும் படியாகச் செய்தவன் யாவன்? ஆ அம்மணி! தாங்கள் இன்னும் வாளா இருப்பது என்னை மீளாத் துயரத்திலன்றோ ஆழ்த்துகின்றது.... தாயே! தாயே!....ஆ! இதென்ன தங்கள் கண்களினின்றும் நீர் பெருகுகின்றது. (அஞ்சனா தேவி விழித்தல்) என்னரும் அன்னையே! இனி நான் பொறுக்க மாட்டேன். தங்களை இக்கதிக்குள்ளாக்கிய சண்டாளன் யாவன்கூறுங்கள். இப்பொழுதே அவன் உடலைச் சின்னா பின்னஞ் செய்கின்றேன். (சகுந்தனைத் தற்செயலாய்க் கவனிக்க, அவன் மெல்ல ஓட எத்தனிக்கின்றான்) ஆ! என் தாயின் துயரத்திற்கு இவனே காரணமாக யிருக்கலாம். இதோ அவனைப் பிடித்து —(சகுந்தன் மேல்பாய்ந்து, இழுத்து வந்து தன் தாயின் பாதத்தை வணங்கும் படிச் செய்தல்.)

அஞ். ஆ! என் செல்வமே! அவனை விட்டுவிடு. அவன் மிகவும் மனம் நொந்திருக்கின்றான்.

ஹநு. அவன் மனம் நொந்திருக்கின்றது எனக் கூறும் தங்கள் மனம் வெந்தல்லவோ இருக்கின்றது. தாயே! தயை செய்து தங்கள் துயரத்தின் காரணத்தைச் சற்று விபரமாகக் கூறுங்கள்.

அஞ். அப்பா! அத்துயரம் என் பேதமையினாலும், முன் யோசனை யில்லாமையினாலும் விளைந்தது. அதை உனக்குத் தெரிவித்தால் நீ மிகவும் வேதனைக்குள்ளாவாய்.... ஆ! கண்ணே! இந்த தருமசங்கடத்திற்குப் பாவியேன் என்ன செய்வேன்!

ஹநு. பெற்ற தாயின் பணி செய்தலே பிள்ளையின் கடமை என்பதை யாரோ மறப்பவன்? ஆதலின் தாயே! தம்முடைய ஆசியினாலும், என் புஜபல பராக்கிரமத்தினாலும், எக்கருமத்தையும் தம் பொருட்டு என்றும் செய்யக் காத்

திருக்கின்றேன். தயை செய்து தம் குறையைத் தெரிவியும் ஸ்ரீராம நாம பலத்தைக் கொண்டு அதற்குற்ற வழி செய்கின்றேன்.

அஞ். சரி! உண்மையை உரைத்தலே நலம். குழந்தாய் ! இதோ நிற்கும், காஞ்சனபுரத் தாசஞன சகுந்தன் என்னை வணங்கி அபயம் பெற்றனன். ஆகவே இதுபோது என் வாக்கை நிறைவேற்ற உன் உதவி வேண்டும்.

ஹநு. தாயே ! இவ்வாசனுக்குத் தாங்கள் எப்பொழுது அபயம் கொடுத்தீர்களோ, அப்பொழுதே அவன் காப்பாற்றப் பட்டான் என்பதிற் சந்தேகம் வேண்டுவதில்லை. அம்மா ! இவ்வாசனை யாரிடமிருந்து காப்பாற்றவேண்டும்?

அஞ். விசுவாமித்திரர்......

ஹநு. யார் ! விசுவாமித்திரரா !

அஞ். இல்லை- ஆ ! நெஞ்சம் பரிதவிக்கின்றதே ! ....குழந்தாய்! விசுவாமித்திரரின் சிஷ்யனாகிய ஸ்ரீ இராமனிடமிருந்து இவ் வாசனை நீ காப்பாற்றவேண்டும்.

ஹநு. ஹா ! ஹா ! என்ன பிழை செய்தீர்கள். அம்மா ! இராம அபராதிக்கு அபயம் அளிக்க உமது மனம் எவ்வாறு துணிந்தது ! மகா பலிஷ்டனை இராவணனையும், அவனை வென்ற வாலியையும், கொன்ற கோதண்ட இராமனையோ எதிர்ப்பது. ஏ இராமா! பரந்தாமா ! அபயம் ! அபயம் ! (மூர்ச்சித்தல். பின்னர் எழுந்து) ஆ ! இம்மீளாத் துயரத்திற்கு ஆளாயினனே ? எவ்விதம் என் தாயின் வாக்கை நிறைவேற்றுவேன். தாயே ! அடியேன் இனி யாது செய்வேன்!

அஞ். செல்வனே ! தாயின் வாக்கை நிறைவேற்ற வேண்டு மானால் நீ இராமனை எதிர்த்தே தீரவேண்டும்.

ஹநு. ஆ ! ஆ ! என் அறிவு கலங்குவதேன் ? தாயே ! தாமே

எனக்கு வழி காட்டவேண்டும்.

அஞ். அப்பா! நடந்தது நடந்துவிட்டது. இனி வருந்துவதில் பயனில்லை. சகுந்தா இப்படிவா. (சகுந்தன் கரத்தை ஹநுமானிடம் அளித்து) அப்பா! இவன் உயிரை இன்று சூர்யஅஸ்தமனம்வரை காக்க வேண்டியது உனது கடமை. பிறகு நீ உன் இஷ்டப்படிச் செல்லலாம். என்ன கூறுகின்றனை?

ஹநு. அம்மா! தங்கள் கட்டளைப்படி நான் இச்சகுந்தனைக் காப்பாற்றுவேன். இது சத்தியம். ஏ இராஜனே! இனி நீ கவலைப்படாமல், என் அன்னையின் ஆசிரமத்தில் அமர்ந்து ஸ்ரீராமநாமத்தை உள்ளன்புடன் ஜபித்துக் கொண்டிரு.

சகு. பிரபோ! எனக்காகத் தாங்கள் படுங்கஷ்டங்களைப் பார்க்க மனம் தாளவில்லை. ஆதலின் தாம் என் பொருட்டு மனம் வருந்தவேண்டாம். அடியேன் ஸ்ரீராகவனின் கரத்தால் இறப்பதற்குச் சித்தமாயிருக்கின்றேன்.

ஹநு. ஏ இராஜனே! வருத்தத்துடன் கூறும் மொழிகள் போதும். இனி நீ கவலைப்படாமல், என் அன்னையின் ஆசிரமத்திற்குட்சென்று நான் கூப்பிடும்வரை ஸ்ரீராம நாமத்தைப் பஜித்துக் கொண்டிரு. சிறந்த அந்த இராம நாமத்தை எவன் சதா காலமும் கூறுகின்றானோ அவன், கவலைகள் நீங்கினவனாய் ஜீவன் முக்தனாகின்றான்.

ஜயது ஜயது மந்த்ரம் ஜன்ம ஸாபல்ய மந்த்ரம்
ஜனன மரண பேத க்லேச விச்சேத மந்த்ரம்
சகல நிகம மந்த்ரம், ஸர்வ சாஸ்த்ரைக மந்த்ரம்
ரகுபதி நிஜ மந்த்ரம், ராம ராமேதி மந்த்ரம்

"ஸ்ரீராம" என்னும் மந்திரம் முக்கியமானது. இம் மந்திரம் தான் சிறந்த பதம். இதுதான் ஜனன மரணத்தைப் போக்கும் தாரகம். 'ஸ்ரீராம' என்று சொல்லுகிறவன் பிரும்ம சொரூபத்தை யடைகிறான்.

நண்பா ! கோரமான பாபத்தைச் செய்த ஒருவன் தாபத்தோடு ஒருதரம் இராம நாமத்தைக் கூறுவானேயாகில் அவன் அப்பாபத்தினின்று விடுபடுவதுடன் மானிடர்களில் சிறந்தவனாக விளங்குவான். ஆதலின் சிரேஷ்டமான இராமநாமத்தை உச்சரித்தவண்ணம் இவ்வாசிரமத்திலிருப்பாய்.

சகு. பிரபோ ! தங்கள் கருத்தின்படியே நடந்துகொள்ளுகிறேன். (ஆசிரமத்திற்குள் செல்லல்)

ஹநு. தாயே ! விசுவாமித்திரர் ஸ்ரீ இராகவன் உதவியைப் பெற்றது தங்களுக்கு எப்படித் தெரியவந்தது ?

அஞ். நாரதர் தெரிவித்தார்.

ஹநு. யார் ! நாரதரா ! பேஷ். தம்மிடங்கூட சேஷ்டையா ! நன்று....தாயே! சகுந்தனை இன்று அஸ்தமனம் வரை காப்பாற்றிய பிறகே, யான் என் ஐயனின் சேவைக்குப் போக வேண்டும். அந்தோ ! அதற்குள்ளாக என்னென்ன விபரீதங்கள் நேரிடுமோ அறியேன். ஆஹா. என்பிரிவைச் சிறிதும் தாளாத இரகுவீரன், இன்று மிகவும் வருந்துவார். மேலும் நான் இன்று அவருக்கு எதிரியாக இருப்பதை அறிவாரேயாயின் அவர் மனம் என்ன பாடுபடுமோ ! தாயே ! (உற்றுநோக்கி) ஆ ! என் தாய் நிஷ்டை போயினர். இன்று சந்தியாகாலம்வரை, தாய் தந்த அடைக்கலப் பொருளைக் காப்பாற்ற என் தலைவரின் சரணங்களை வணங்குவோம். (தன் தாயை வலம் செய்தவண்ணம்)

சுத்த பிருஹ்ம பராத்பர ராம—காலாத் மகபர மேச்வர ராம
சேஷ தல்பஸுக நித்ரித ராம—ஸ்ரீமத் தசரத நந்தந ராம
ஸகல ஜீவஸம் ரக்ஷக ராம—ஸமஸ்த லோகோத் தாரக ராம
ராமராம ஜய ராஜா ராம—ராமராம ஜய ஸீதா ராம

[ஏழாம் களம் முடிகிறது.]

களம். 8.

இடம்:— விசுவாமித்திரர் பர்ணசாலையை அடுத்த ஓர் அடவி.

காலம்:— காலை.

நடர்:—நாரதர், பரந்தாமன்.

நார. (ஓடிவந்து) நல்லவேளையாக நாம் இங்கு வந்தோம். இன்னும் சற்றுநேரம் அஞ்சனாதேவியின் ஆசிரமத்தில் இருந்திருப்போமாயின், ஹநுமான் நம்மையும் ஓர் பார்வை பார்த்திருப்பார். நமது நற்காலமே நம்மை அவரது கண்களுக்கு முன் அகப்படாமற் செய்தது. இனி பயமில்லை. நமது சபதம் எப்படியும் நிறைவேறிவிடும். ஆயினும் இப்பொழுது இருக்கும் நிலையைக் கவனித்தால், பெரிய ஆபத்துநேரிடும் போல் தோன்றுகிறது. (பரந்தாமன் நகைத்துக் கொண்டே வெளிவந்து நிற்கின்றான்.)

பரந். ஸ்வாமி ! மன்னிக்கவேண்டும், நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

நார. (திடுக்கிட்டு) பரந்தாமனா ! அடே ! எங்கிருந்து வருகிறாய் ?

பரந். தாங்கள் எவ்விடமிருந்து இங்கு வந்தீர்கள் ? மன்னிக்க வேண்டும்.

நார. அஞ்சனகிரியிலிருந்து வருகிறேன்.

பரந். அப்படியா ! நான் அஞ்சனாகிரியிலிருக்கும் அஞ்சனாதேவி ஆசிரமத்துப் பின்புறமிருந்து வருகிறேன்.

நார. எதற்காக அங்குவந்தாய் ?

பரந். தங்களைப்போன்றவர்களை விடாமல் எப்பொழுதும் தரிசிப்பதற்குத்தான்.

நார. பையன் கெட்டிக்காரன் ! இருக்கட்டும். ஏனப்பா பரந்தாமா ! ஏன் இப்படி மூச்சுவாங்குகின்றது உனக்கு ?

பரந். பின் உங்களுடன் ஓடிவர என்னால் முடியுமோ ! மன்னிக்க வேண்டும். என்னவென்றாலும் நீங்கள் இப்படி ஓடிவரலாகாது. நல்லவேளை நான் இன்னும் சிறிது நேரம் அங்கிருந்தால், இங்கு திரும்புவதேது ! தாங்கள் கூறியபடி மாருதி என்னையும் ஓர் பார்வை பார்த்திருப்பார்.

நார. சரி, நேரமாகின்றது. நான் போய்வருகிறேன்.

பரந். நானும் போய் வருகின்றேன். எனக்காக என் குரு காத்திருப்பார். நான்போய் நடந்த விஷயங்களை அவரிடம் தெரிவித்து விட்டு, பழையபாடங்களை ஒப்புவித்துவிட்டு, கடைசியாக, கொசுக்கடி, எறும்புக்கடி, வாய்க்கடி முதலியவைகளிடமிருந்து தப்பித்து நல்ல நித்திரை செய்ய ஏற்பாடு செய்து விட்டுப் பின்னர் .... பின்னர்....அடடா ! மறந்து விட்டேன் ! மன்னிக்கவேண்டும்.

நார. பேஷ். குருவுக்கு ஏற்ற சிஷ்யன். சரி நேரமாகின்றது, நான் போய் வருகின்றேன்.

பரந். ஸ்ரீ ராமரிடத்தில் என்னைப் பற்றிக் கொஞ்சம் தெரிவித்து ஓர் உத்தியோகம் வாங்கித்தரும்படி........

நார. பக்தியோகப் பயிற்சிபெறும் உனக்கு இப்பொழுது உத்தியோக முயற்சி வேண்டாம்.

பரந். அதெல்லாம் எனக்குத் தெரியாது. தாங்கள் எனக்கு எப்படியாவது அயோத்தியில் வேலை வாங்கித்தர வேண்டும். என் தாய் தந்தையர் மிகவும் ஏழைகள்.

நார. பாவம் ! இச்சிறுவனைப் பக்திமார்க்கத்தில் திருப்ப வேண்டும்..... அப்பா கூடியசீக்கிரம் உனக்குத் தக்கவழி செய்கிறேன் கவலைப்படாதே. போய்வா.

பரந். மிகவும் சந்தோஷம். தேவரீர் இப்பொழுது நேராக எவ்விடமோ— மன்னிக்கவேண்டும்.

நார. இதென்ன கேள்வி! உன்வேலையைப்பார்.

பரங். ஸ்வாமி. நமஸ்காரம். சென்று வருகிறேன்.

நார. கஷ்டப் பட்டால்தான் காரிய சித்தி—இருக்கட்டும்.
(இருவரும் வெவ்வேறு பக்கம் செல்லல்.)

[எட்டாம் களம் முடிகிறது.]

களம் 9.

இடம்:—அயோத்தியில் ஓர் மண்டபம்

காலம்:—காலை

நடர்:— ஸீதாதேவி, இராமபிரான், இலக்ஷ்மணர், நாரதர் அங்கதன்.

(இராமபிரான் வருத்தத்துடன் அமர்ந்திருக்கிறார். ஸீதா தேவியார் அருகில் நின்று கொண்டிருத்தல்.)

ஸீதா. நாதா! தாங்கள் குருவுக்குக் கொடுத்த வாக்கினின்றும் தங்களை மீட்டுக்கொள்ள வேறு வித உபாயமில்லையா! நிரபராதியான சகுந்தனைக் கொன்றால் உலகம் பழிக்குமே.

இரா. பிரியே! நான் யாது செய்வேன். சந்தர்ப்பத்தை அனுசரித்து அவர் கேட்டதைக் கொடுப்பதாக வாக்களித்து விட்டேன். முற்று முணர்ந்த என் குருநாதர் இவ்விதச் செய்கையை என்னிடமிருந்து எதிர்பார்ப்பார் என்று கொஞ்சமேனும் நான் கருதவில்லை. யாரை, விட்டது விதி.

ஸீதா. நாதா! இவ்விஷயம் தங்கள் சகோதரருக்குத் தெரிந்தால் அவர் என்ன பாடுபடுவார்.

இரா. இவ்விஷயத்தை அவனுக்கு இன்று காலையிலேயே தெரிவித்தேன். இலக்ஷ்மணன் மிகவும் வருந்திப் பின்னர் குருவுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டியது நமது கடமையாகும் எனக் கூறினன்.

ஸீதா. அவ்விதமாயின் யுத்தம் செய்வதாகத் தீர்மானித்து விட்டீர்களா ?

இரா. ஆஹா. அதில் தடை யென்ன. இல்க்ஷ்மணன் வந்ததும் புறப்பட வேண்டியதுதான்.

ஸீதா. ஆ ! அதோ அவரும் வருகிறார். (இலக்ஷ்மணர் ஆயுதங்களுடன் பிரவேசித்து நமஸ்கரித்து)

இல. அண்ணு ! தங்கள் கட்டளைப்படி ஆயுதங்களை எடுத்து வந்தேன்.

இரா. இனி புறப்படலாமல்லவா.

இல. மாருதியின்றி நாம் எப்படிப் புறப்படுவது!

இரா. ஆம் மறந்தேன். ஏன் இன்னும் மாருதி வரவில்லை. தன் தாயை வணங்கி வர அதிகாலையிலேயே புறப்பட்டனரே. (ஒரு காவலன் பிரவேசித்து வணங்கி)

காவ. பிரபோ ! நாரதப் பிர்மம் வந்திருக்கிறார்.

இரா. சீக்கிரமாக வரச்சொல். (காவலன் செல்ல நாரதர் பிரவேசம்.)

இரா. மகரிஷே ! வரவேண்டும்! இதோ இவ்வாசனத்தில் அமரவேண்டும். நமஸ்கரிக்கின்றேன். (இராமபிரான் ஸீதா தேவியாருடன் வணங்க, யாவரும் வணங்கல்)

நார. தீர்க்க சுமங்கலீ பவ ! தீர்க்காயுஷ்மான் பவ ! என்ன இராமா ! க்ஷேமந்தானே.

இரா. தங்களுடைய ஆசீர்வாதத்தினுல் யாவரும் க்ஷேமம்.

நார. என்ன ! இலக்ஷ்மணு ! இன்று உங்களேப்பார்த்தால் ஏதோ ஒரு விதமாகக் காணப் படுகின்றீர்களே. என்ன விசேஷம்?

இல. ஒரு சிறு யுத்தம் செய்யப் போகிருேம்.

நார. யுத்தமா ! யாருடனப்பா !

இரா. காஞ்சன புரத்தரசனுன சகுந்தனுடன்.

நார. என்ன ! சகுந்தனுடனு ! அடடா ! அவன் உன்னுடைய அந்தரங்க நண்பனுயிற்றே. காரணம்?

இரா. பிரபோ ! நேற்று மாலே எங்கள் சற்குருவை, சகுந்தன் ஒரு சபையில் அவமானம் செய்து விட்டனனும். அதனுல் இன்று மாலேக்குள் அவனுடைய சிரம் தம்பாதத்தில் விழும்படிச் செய்ய வேண்டுமென்று, குரு எங்களுக்குக் கட்டளேயிட்டிருக்கிருர்........

இல. தவ சிரேஷ்டரே ! இவ்விஷயம் இதுவரை தமக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லேயே.

நார. (நகைத்து விட்டு) ஏதோ கொஞ்சம் தெரியும். இராமா! விசுவாமித்திரர் சகுந்தனேச் சபித்தது அவர் பெருமைக்கு அழகல்ல. அத்தகையாருடைய கட்டளேக்குட்பட்டு சகுந்தனே எதிர்ப்பது உன் நிலேமைக்குச்சரியல்ல. ஆதலால் ஜாக்கிரதையாக எதையும் யோசித்துச்செய்.

இல. ஸ்வாமி ! என்ன ! அண்ணுவிடம் கோபித்துப் பேசுகிறீர்கள்.

நார. அப்பா ! இலக்ஷ்மணு ! காலத்திற்குத் தகுந்த கோலமிது. ஆதலால் நீ சற்றுப்பொறு. இராகவா ! இதுகாறும் சூரிய குலத்தில் தோன்றிய அரசர் யாவரும், தருமத்திற்கும், சத்தியத்திற்கும், வழிக் காட்டிகளாய் விளங்கினர். ஆனுல் நீயோ நியாயத்திற்கும் தருமத்திற்கும் விரோதமாக

இதுபோது நடக்க எண்ணுகின்றனே. இது முறை யல்ல.

இரா. ஸ்வாமி! மன்னிக்க வேண்டும். குரு வார்த்தைப் படி நடப்பதே எனது கடமை.

நார. ஓகோ அப்படியா! நன்று. இராமா! ஆதியில் தாடகையை மாய்க்கும்படி உத்திரவிட்ட இந்த விசுவாமித்திரிடமே " மாய்க்கமாட்டேன், இது நீதியல்ல," எனத் தருமங்களை எடுத்துரைத்த நீ, சகுந்தன் விஷயத்தில் ஏன், அத்தருமா தருமங்களை எடுத்துச் சொல்லலாகாது. இராமா ! பரமபக்தனாகிய சகுந்தன் அறியாமையினால் செய்தபிழையை, மன்னிக்கும்படி நீ, உன்குருவிடம் மன்றாடவேண்டியதை விடுத்து நீயே அவனைத் தண்டிக்க எண்ணுவது தர்மமல்ல

இரா. ஸ்வாமி! தர்மம்! அதர்மம் என்பதை யோசிக்க, இது சமயம் அல்ல. என்னைப்பற்றித் தாங்கள் எது வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். குரு சொற்படி கேட்பதே கோசலை மைந்தனின் குணம் ஆதலால் அவர் கட்டளைப்படி யான் நடந்தேதீரவேண்டும். அதுதான் சூரியகுலத்திற்கழகு.

நார. சரி! பிறகு உன் இஷ்டம்.... ஆயினும் இராமா! எதிரியின் தற்போதைய பலத்தைக் கண்டல்லவோ, நீ யுத்தத்திற்கு புறப்படவேண்டும்.

இல. எதிரியின் பலம்! அது எம்மாத்திரம் எங்களுக்கு-அண்ணா! நேரமாகின்றதே. புறப்படலாமே.

இரா. இலக்ஷ்மணா! பொறு. ஒப்பற்ற நம் வீரஹநுமான் இன்றி ஒரு காரியத்திலும் நாம் பிரவேசிக்க முடியாது. பொறு, அவன் வரட்டும்.

நார. வீரஹநுமான் ஏன் இங்கு வரவேண்டும்?

இரா. அவனின்றி நாம் யுத்தத்திற்கு எவ்விதம் செல்லமுடியும்?

நார. மாருதியின்றி நீங்கள் யுத்தம் செய்துதான் தீரவேண்டும்-- அப்பொழுது உங்கள் குருவின் வார்த்தை நிறைவேறும்.

இரா. பிரபோ ! தாங்கள் கூறுவதின் கருத்து விளங்க வில்லையே.

நார. விளங்கச் செய்வதற்காகத்தான், இவ்வளவு காலையில் இங்குவந்தேன். இராமா ! மாருதிக்காக நீங்கள் காத்துக் கொண்டிருப்பதில் ஒரு பிரயோசனமும் இல்லை. அவர் இன்று சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னரே, உன்னைக் காண்பார்.

இரா. ஏன் !

நார. இராமா ! தாயின் வார்த்தைக்குக் கீழ்படிந்து நடக்க நீ எவ்வாறு பதினான்கு வருடங்கள் காட்டில் வாழ்வதற்கு ஒப்பினையோ, அதேபோல், மாத்ரு பக்தியிற் சிறந்த மாருதியும் மாதாவின் கட்டளைப்படி மன்னன் சகுந்தனைக் காப்பதாக, ஒப்பற்ற தன்வீரத் தாயிடத்தில் சத்தியம் செய்து கொடுத்துவிட்டார்.

ஸீதா. ஆ ! இதென்ன விபரிதம்.

இல. மாருதியையோ நாம் தடைசெய்யமுடியும்

இரா. என்ன—என்ன ! மோசம் ! (மயங்கி அயர்ந்து எழுந்து) பிரிய மாருதி ! ஆ இலக்ஷ்மணா ! ஸீதா ! என் உயிரை யானே எப்படி எதிர்ப்பேன். என் கரங்கள், அவனை நோக்கி வில்லெடுத்து, நாணேற்றி எவ்வாறு அம்பு எய்யும் ! அந்தோ ! இது எவருடைய சூழ்ச்சியோ தெரியவில்லையே ! சனீஸ்வரனே ! என் மீது கிருபை வைக்கவேண்டும். ஆ ஸீதா ! நீ கனவில் கண்ட காக்ஷி நனவாகும் போல் தோற்றுகிறதே. முற்றுமுணர்ந்த முனிவரே ! இதற்கு யான் இனி யாதுசெய்வேன்.

நார. என்ன செய்வது ! விசுவாமித்திரரின் கட்டளையினின்றும் மீட்டுக் கொள்வதுதான் அழகு.

இரா. ஸ்வாமி ! கொடுத்தவாக்கைத் தவறி நடப்பவன் யான் அல்லன். ஸத்குரோ ! நீரே கதி. எது வந்தபோதிலும் சரி. நான் மாருதியை எதிர்த்து .... ஆ .... ஆம், அவனை எதிர்த்துச் சகுந்தனின் சிரத்தை அவர்தம் பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன். இலக்ஷ்மணா ! புறப்படு.

நார. இராமா ! பொறு ! என்ன காரியம் செய்யத் துணிந்தனை! அஞ்சனாதேவி குமாரர், மஹாபலிஷ்டர், ஸமுத்திரத்தைத் தாண்டியவர், ஸீதையின் சோகத்தைத் தீர்த்தவர், இலங்கையை எரித்தவர், இராவணனை அடக்கியவர், இந்திரஜித்தை எதிர்த்தவர், வஜ்ர சரீரி, என்றும் சிரஞ்சீவி—இத்தகைய வீரஹநுமான் உங்களுக்குத் தந்தை போலவும், தனயன் போலவும், பலதடவைகளில் உடன் நின்று உங்களைக்காத்து இரக்ஷித்திருக்கிறார். ஒரு சமயம் இராவண யுத்தத்தில் பிரும்மாஸ்திரத்தால் கட்டுண்ட உங்களைக் காக்க எண்ணி ஒப்பற்ற அவ்வாயு தனயன் சஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்து வந்து காப்பாற்றினார். அவ்வமயம் நீ மாருதியை நோக்கி "தரும மார்க்கத்தில் தவறாதவனே ! நீ எங்களுக் குண்டான பழியையும், பகையையும் காத்து எங்களுக்கு உயிரளித்தனை. கைம்மாறு சிறிதும் கருதாது தொண்டு செய்யும் தைரியமுள்ள வீரனே ! உலகங்கள் யாவும் அழியும் பிரளய காலத்திலும் நீ அழியாது சிரஞ்சீவியாக வாழ்வாயாக" என ஆசி கூறினையே. அத்தகைய ஆசிக்கும் அன்பிற்கும், தியாகத்திற்கும் பாத்திரரான வீரஸிம்மமாகிய மாருதியுடன் நீ யுத்தம் செய்வதென்றால் முடியும் காரியமா? வேண்டாம் இராமா ! சொல்வதைக் கேள். உடனே விசுவாமித்திரரிடம் சென்று அவரது கட்டளையினின்றும் உன்னை மீட்டுக் கொள். பிறகு யாவும் இனிதே முடியும்.

இல. அண்ணா ! முனிவர் சொற்படி நடப்பதே நலமென அடியேனுக்குத் தோற்றுகிறது.

ஸீதா. ஆம் நாதா ! காரியம் மிகவும் வலுத்துவிட்டது. மகா முனிவர் கூறியபடி செய்துபாருங்கள். மாருதியுடன்

யுத்தம் ஒரு நாளும் கூடாது.

இரா. ஆ. நான் இருதலைக் கொள்ளி எறும்பு போல் ஆனேனே! ஒருபுறம் என் பிராணனுக்குச் சமமான மாருதி. மற்றொரு புறம் எனக்குச்சகல கலைகளையும் ஓதிய குருநாதர். இருவர் களுடைய விரோதமும் எனக்கு உதவாது. தவமுனியே! இத்தகைய மனக்கலக்கங்களை அடியேனுக்கு உண் டாக்கிய உத்தம புருஷர் யாவரோ? தயை செய்து தெரிவிக்க வேண்டும்.

நார. சீ! இனி நாம் இங்கிருக்கலாகாது— அப்பா இராமா! ஏதோ தெரிந்ததைச் சொன்னேன். சௌகரியப்படிச் செய்துகொள். நான் வருகின்றேன். (எழ, யாவரும் வணங்கல்—ஆசீ கூறித் தனித்து) என்னகஷ்டம். பெருங் கலகமாகவன்றோ வருகின்றது. (செல்லல்)

ஸீதா. நாதா! சுத்த வீரராகிய மாருதியுடன் தாம் யுத்தம் செய் வதென்றால் சாமானிய காரியமல்ல. ஆதலால் அவரைச் சமாதானப் படுத்தி, சுகுந்தனை அழைத்து வர, தக்க மனிதனை அஞ்சன கிரிக்கு அனுப்புதல் நலமெனத் தோற்றுகின்றது.

இல. அண்ணா! ஹநுமானைச் சமாதானப் படுத்துவதை விட நம் குருவைச் சமாதானப் படுத்தி, ஏன் அவர் கட்டளை யினின்றும் நம்மை விடுவிக்கச் சொல்லலாகாது.

இரா. ஏன்! இவர்கள் இருவரையுமே சமாதானப் படுத்தி விட்டால்—

இல. அது அசாத்தியமான காரியமன்றோ.

இரா. இலக்ஷ்மணா! ஆஞ்சநேயரிடத்திற்கு நமது அங்கதனை அனுப்பிச் சமாதானப் படுத்தி, சகுந்தனை அழைத்துவரச் செய்வது ஒன்று. மற்றொன்று நாமே குருவிடம் சென்று அவர் நமக்கிட்ட கட்டளையை மீட்டுக் கொள்ளச் செய்வது.

இவ்விரண்டு செய்கைகளிலும் ஏதேனும் ஒன்று பலித்தாலும் நலமல்லவா.

இல. நலந்தான். ஆயினும்....

இரா. யோசனைவேண்டாம். இலக்ஷ்மணா! அங்கதனிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்து அழைத்துவா.

இல. ஆக்ஞை! அண்ணா! (செல்லல்)

ஸீதா. தங்கள் எண்ணம் திருப்திகரமாக முடியுமென்று எனக்குத் தோற்றவில்லை. மாருதி தன் தாயின் வார்த்தையை ஒருநாளும் தட்டமாட்டார். சகுந்தனையும் நம்மிடம் அனுப்பமாட்டார். ஆதலால் குருவைச் சமாதானப் படுத்தலே நலம்.

இரா. ஸீதா! எனக்கு ஒன்றும் தோற்றவில்லை. ஆயினும் வாயுதனையனை வசப்படுத்தியே தீரவேண்டும். (இலக்ஷ்மணர் அங்கதனுடன் பிரவேசித்தல்)

அங். (வீழ்ந்து நமஸ்கரித்து) பிரபோ! அடியேன் தங்களுடைய பணிகளை அன்புடன் செய்யக் காத்திருக்கிறேன். மாருதியினுடைய செய்கையை இளையவர் எடுத்துக் கூறினார். நான் எப்படியும் ஆஞ்சநேயரை சமாதானப் படுத்தி சகுந்தனைத் தங்களிடம் அழைத்து வருகின்றேன். கவலை வேண்டாம். உத்திரவுகொடுங்கள்.

இரா. அங்கதா! என்னிடத்தில் நீ எப்பொழுதும் மாறாத அன்பு வைத்திருக்கிறாய். பலதடவைகளில் நீ எனக்கு அரிய பெரிய உதவிகளைச் சரியான காலத்தில் செய்து முடித்திருக்கிறாய். அதைப்போல் இன்றையதினமும் இவ்விஷயத்தை எப்படியும் இன்பகாரமாக முடித்தல் வேண்டும். அஞ்சனாதேவியிடத்தும் என் சார்பாக....

அங். பிரபோ! கவலைவேண்டாம். அடியேன் சடுதியிற்சென்று

எல்லாவிஷயங்களையும் மங்களமாக முடித்து வருகின்றேன்.

இரா. அங்கதா! நானும் தம்பியும் விசுவாமித்திரரின் ஆசிரமத்திற்கு இப்பொழுதே செல்கின்ருேம். காரியத்தை முடித்துக்கொண்டு அங்கு வந்துசேர்.

அங். சித்தம் பிரபோ—(ஓடிச் செல்லல்)

இரா. இலக்ஷ்மணு ! புறப்படு. செல்வோம்.

ஸீதா. பிரபோ ! தாங்கள் மீண்டும் வரும்வரை என்மனம் மிகவும் சஞ்சலமடையுமே. யான் என்செய்வேன்.

இரா. பெண்ணே ! நீ எதற்கும் வருந்த வேண்டாம். (செல்லல்)

ஸீதா. நாதா ! ஓர் சந்தேகம்.

இரா. இந்தச்சமயத்திலா சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டும். பிரியே ! என்ன சமாசாரம் ? சீக்கிரம் சொல்.

ஸீதா. பிரபோ ! வெற்றி யாருக்கு உண்டாகவேண்டும் என்று பிரார்த்திப்பது?

இரா. நின் இஷ்டப்படிச் செய்வாய். (புன்னகையுடன் செல்ல ஸீதாதேவி வருந்திச் சாய்கிருள்.)

[ஒன்பதாம் களம் முடிகிறது.]

களம் 10.

இடம்:— அஞ்சனதேவியின் ஆசிரமம்.

காலம்:— முற்பகல்.

நடர்:— அஞ்சனதேவி, ஹநுமான், அங்கதன், சகுந்தன்.

[அஞ்சனை ஓர் புறம் தவம் செய்கிறார்கள். மாருதி ஆசிரம வாயிலை அடைத்த வண்ணம், ஸ்ரீ ராமத் தியானம் செய்கிறார். அங்கதன் பிரவேசித்து அஞ்சனையை சந்தடி செய்யாமல் வணங்கி, பின் மாருதியை உற்று நோக்கிக் கவனித்தல்]

அங். ஆஹா! சர்வலோக ரக்ஷகரான ஸ்ரீராகவனிடத்து என்ன பக்தி வைத்திருக்கிறார் (கைகூப்பி) ஸ்ரீராம நாமத்தை எவ்வளவு இனிமையாக கானம் செய்கிறார். இத்தகைய பக்தி வாய்ந்த உத்தம சிரேஷ்டரிடம், நாம் எவ்வாறு பேச வல்லோம். ஸ்ரீ ராமா! நீரே துணை. (மாருதியின் அருகில் சென்று பிரமித்து) ஆஹா! என்ன தேஜஸ் இளஞ் சூரியன் போல் பிரகாசிக்கும் திருக்கிரீடமும், அறிவு, ஆண்மை, ஈவு, இரக்கம், அன்பு, அருள் முதலியவற்றை வெளிப்படுத்தும் பெரும் தோற்றமும், பிறை நெற்றியும், நெற்றிமேற் கொண்ட குறியும், ஆழ்ந்த கன்னமும் "ஸ்ரீ ராம் ராம்" என்று எப்பொழுதும் சப்திக்கும் பவளத் திருவாயும், விரிந்த மார்பும், பரந்த தோளும் அதன் மேல் ஆடும் துளஸி வடமும், ஸ்ரீ ராமனுக்குத் தொண்டு செய்யும் திருக் கரமும், உலகத்தையே தாங்கும் தொடைகளும், அவற்றிற் கேற்ற பாதங்களும், சர்வ வினைகளும் போம், போம், என்று ஒலிக்கும் வீரக்கழலும், உடைய ஸ்ரீராம தூதரோ தவறி நடப்பவர். அந்தோ நாம் இவரை எப்படித் திருப்புவோம். ஸ்ரீ ராகவா! உம்மையே நம்பினேன். (ஆஞ்சநேயரை யணுகி) மாருதி! — ஸ்ரீராமா! — மாருதி.....

ஹநு. ஆ! யாரது அங்கதா! என்ன விசேஷம்.

அங். நண்பரே ! உமது செய்கை விபரீதமாக வன்றோ இருக்கிறது. இதுகாறும் ஒருவருடைய பணிவிடையை பிழையின்றி செய்து வந்து, அவருடைய அன்னத்தை யுண்டு, அன்புக்கும் பாத்திரராகி, கடைசியாக அவருக்கு விரோதமாக நடக்க எண்ணினீரே. இது தம் போன்ற வற்கு அடுக்குமா.

ஹநு. அதெல்லாம் இருக்கட்டும், என் ஐயன் ஸ்ரீ ராகவன் க்ஷேமந்தானே. (சித்தம் மாறி ராமன் பால் ஈடுபடுதல்)

அங். தம்மைப் பிரிந்த அவர் எப்படி க்ஷேமமாக இருக்க முடியும்.

ஹநு. அந்தோ ! என் பிரபுவுக்கு நேர்ந்ததென்ன?

அங். உம்முடைய செய்கையால், அவருக்குச் சித்தம் கலங்கி விட்டது.

ஹநு. பிரிய அங்கதா ! அடியேனுக்கு ஏதாவது கட்டளை யுண்டோ. ஸ்ரீ ராம் ராம்.......

அங். உண்டு. சகுந்தனையும், தம்மையும் அழைத்து வரும்படி கட்டளையிட்டிருக்கிறார். சகுந்தன் ஸ்ரீ ராம விரோதி யன்றோ.

ஹநு. ஆம் ! ஆம் ! ஸ்ரீராமபிரானின் விரோதி ! ....ஆனால் என் தாயினிடம் அபயம் பெற்றவன் .... இராகவனின் விரோதி .... தாயின்............

அங். எப்படி யிருந்த போதிலும் ஸ்ரீ ராம அபராதியன்றோ.

ஹநு. ஆம். மறந்து விட்டேன். சரி. அங்கதா ! சகுந்தன் இப் பர்ணசாலையின் உட்புறம் சயனித்திருக்கின்றான்.

அங். இது தான் சமயம். ஏ சகுந்தா ! வெளியே வா (அஞ்சனை நிஷ்டை கலைகிறாள் — சகுந்தன் நடுக்கத்துடன்

வெளியே வருதல்.)

ஹநு. அப்பா சகுந்தா ! உன்னை அங்கதனுடன் அனுப்பி வைக்கும்படி என் தலைவர் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி யிடமிருந்து அடியேனுக்கு, உத்திரவு வந்திருக்கிறது. ஆதலின் நீ இவருடன் செல்.

அஞ். (கோபத்துடன் திரும்பி)மாருதி ! என்ன காரியம் செய்யத் துணிந்தனை.

ஹநு. (நடுங்கி) ஆ ! தாயே மறந்தேன் தம்மை (மூர்ச்சித்துக் கீழே வீழ்கிறார் — அங்கதனும் சகுந்தனும் நடுங்குதல்)

அஞ். சகுந்தா ! ஆஸ்ரமத்தின் உட் செல். (சகுந்தன் பயத்துடன் செல்லல்) அங்கதா ! நீ ஸ்ரீ ரா ம தூ த னை இச்சமயம் வந்ததைப் பற்றி மி க வு ம் சந்தோஷம். " இராகவன் குருவின் வார்த்தைக்குக் கட்டுபட்டிருப்பது போல, மாருதியும் தன் தாயின் வார்த்தைக்கு கட்டு பட்டிருக்கின்றான்." இதை உன் தலைவரிடம் சீக்கிரமே தெரிவிப்பாய். செல்.

அங். அஞ்சனையிடம் எதிர்த்துப் பேச நாம் அருகனல்ல. தாயே ! தங்கள் உத்திரவை சிரமேற் கொண்டேன் நமஸ்காரம், சென்று வருகின்றேன். ஸ்ரீராமா ! என்னை மன்னிப்பீர் ! (ஓடுதல்)

அஞ். (மாருதியை எழுப்பி) குழந்தாய் ! இது என்ன இவ்விதம் செய்தனை. தாயின் வார்த்தையை மீறி நடக்கவோ துணிந்தனை.

ஹநு. அன்னையே ! மிகவும் கஷ்டப்பட்டு ஸ்ரீராமனின் அன்பைப் பருகிய நான் அவருக்கு விரோதமாக எப்படி நடப் பேன். அந்தோ அவரால் இகழப்பட்ட யான், இவ் வுடலை இன்னமும் வைத்திருக் கின்றேனே..... தாயே ! யான் என் செய்வேன். அவரை எவ்விதம் எதிர்ப்பேன்.

எனக்கு ஒன்றும் தோற்ற வில்லையே.

அஞ். மாருதி ! என் உதரத்தில் பிறந்த நீயோ இவ்விதம் பயமுறுகின்றனை. குழந்தாய் உன் வல்லமையை நீ யறியாய். நீ செய்யும் காரியம் தருமமானது ஆதலின். தரும தேவதை உன்னிடமே நின்று வெற்றி தருவள் அஞ்சாதே.

ஹநு. தாயே ! தாங்கள் கூறுவதெல்லாம் உண்மைதான் ஆயினும், என் உயிருக்குச்சமானமாகிய, ஸ்ரீ ராகவரை, எதிர்க்கப் போதுமான தைரியம் என்னிடம் இல்லை யாதலின் அஞ்சுகிறேன்.

அஞ். இதற்காகவா வருந்துகின்றனை. குழந்தாய் ! வா இப்படி (மாருதியின் காதில் ருத்திர மந்திரத்தை ஓதி) மாருதி இந்த ருத்திர ஜபத்தை உடனே ஆரம்பித்து, மனோ வாக்குக் காயங்களால் சாக்ஷாத் சங்கரரை வேண்டுவாய். உனக்கு சர்வாபீஷ்டமும் உண்டாகும்.

ஹநு. உத்திரவுபடி செய்கிறேன் அம்மா.

அஞ். மிகவும் சந்தோஷம் ! நேரமாகின்றது. நான் சில கனி வர்க்கங்களை சீக்கிரமே சேகரித்து வருகின்றேன். நீ ஜபத்திற்கு ஆரம்பிப்பாயாக.

ஹநு. சித்தம் அம்மா (அஞ்சனை செல்லல்—மாருதி, பக்திசிரத்தை யுடன் அமர்ந்து கைகூப்பி ருத்திர மந்திரத்தை சிறிது நேரம் ஜபித்துப் பின்னர்) திரு நீறணிந்த திரிசூலனே ! மறைகள் புகழ் ஆதிமூலனே ! ஐயனே, மெய்யனே ! ஆதியே ! ஜோதியே ! தூயநற்கையனே ! பவவிநாச மயான வாசனே ! கைலாச நிவாசனே! அபயம். அபயம். மனம் தளர்ந்து, உளம் கனிந்து பலம் குறைந்து வேண்டும் அடியேன் குறையைத் தீர்ப்பீர். மாதாவின் வார்த்தைக் குட்பட்டு நடப்பதே மக்களின் கடமை என்பதை அநுசரித்து. நான் சகுந்தனைக் காப்பதாகத் தாயிடம்

வாக்களித்து விட்டேன். அதை நிறைவேற்ற வேண்டுமாயின், என் தலைவர்களை நான் எதிர்க்க வேண்டும் அப்படிச் செய்ய எனக்குப் போதுமான தைரியமும் பலமும் இல்லையென்பதைத் தாங்களே அறிவீர். ஆதலின் ஏ பசுபதி ! தாம்தான் என்னை இந்த சங்கடமான நிலையிலிருந்து காத்து இரக்ஷிப்பதுமன்றி அடியேனையும் என் ஐயனிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

அசரீரி.

ஹே ! நந்திகேஸ்வரா ! நீ வருந்தவேண்டாம். உன் மனது எவ்விஷயத்திலும் திருப்தியடைய வேண்டுமாயின் பல முள்ளவர்களை எளிதில் வென்று சந்தோஷத்தை யளிக்கும் ஸ்ரீராம நாமத்தைக் கைக்கோள்வாயாக. யாவும் இனிது முடியும் அஞ்சேல்!

ஹநு. தன்யன்! தன்யனானேன். என்னே ஸ்ரீ ராம நாமத்தின் மகிமை. இனி இராம நாம பலத்தினாலேயே, அவர்களை வெல்வேன். அவர்கள் பகையை கொல்வேன்.... சகுந்தா ! இனி நீ பயப்பட வேண்டாம் என் குரு சூரிய பகவானும் மத்திய திசைக்கு வந்து விட்டார் இன்னும் சிறிது நாழி பொருத்துக்கொள். உன்னை மங்களகரமாக உன் நகரனுப்பி விடுகின்றேன். அதுவரை உட்சென்று ஸ்ரீராமத் தியானத்தில் ஈடுபட்டிரு. யானும் அத்தாரகத்தை ஜபித்து தைரியமடைகிறேன். (ஸ்ரீராமத் தியானம் செய்தல்)

[பத்தாங் களம் முடிகிறது]

களம் 11.

இடம்:— விசுவாமித்திரர் பர்ணசாலை

காலம்:— பகல்.

நடர்:— விசுவாமித்திரர், பரந்தாமன், ஸ்ரீராமன், இலக்ஷுமணன்.

விசு. (மாத்தியான்னிகம் செய்துகொண்டிருக்கிறார். பரந்தாமன் ஓடி வருகின்றான்) அடே பரந்தாமா! இப்பொழுது தானே நதிக்குச் சென்றாய். அதற்குள் எப்படி ஸ்நானம்செய்து ஜபத்தை முடித்து வந்தாய்.

பரந். இல்லை. போனேன். வெயில் அதிகமாக இருந்தது. நதிக்குச் சென்றால், நாழியாகுமென்று நினைத்து, நமது ஆஸ்ரமத்துக்கு மேற்கே இருக்கும் கிணற்றில் ....

விசு. அடே! அந்தக் கிணற்றில்தான் ஜலம் இல்லையே.

பரந். பின்னே அடுத்த ஆசிரமத்து ஜலந்திரன் இன்று காலையில் தண்ணீர் இருப்பதாகத் தெரிவித்தானே. வேண்டுமென்றால் அவனை இங்கு அழைத்து வரவா.

விசு. அடே வீணைகப் பொய் பேசாதே. பாபம் உன்னைத் தொடரும். போ உடனே நதிக்கு.

பரந். மன்னிக்க வேண்டும். அநியாயமாய் ஜலந்திரன் வார்த்தையைக் கேட்டு மோசம் போனேன். ஸ்வாமி! சீக்கிரமே ஆற்றிற்குச் சென்று ஜபத்தை முடித்து நொடியில் வருகிறேன்.

விசு. சரி. வரும்பொழுது ஆகாரத்திற்கு நல்ல பழங்களைப் பறித்துவா.

பரந். ஆஹா! ஒருபொழுதும் அதை மறக்கமாட்டேன். வயிற்றிற்கு வஞ்சனைசெய்யும் பயித்தியமும் உலகிலுண்டோ. (ஓடுகிறான்—மற்றொரு புறம், இராமனும் இலக்ஷ்மணனும் பிரவேசித்தல்)

இரா. சத்குருவே! நமஸ்கரிக்கின்ரேம். (இருவரும் வணங்கல்)

விசு. என்ன இராமா! எங்கே சகுந்தனின் சிரம் — என்ன இருவரும் தலைகுனிந்து நிற்கின்றீர்கள்.

இரா. பிரபோ! மன்னிக்க வேண்டும். விஷயம் நான் நினைத்ததற்கு முற்றிலும் மாருகிவிட்டது. குருமகாராஜ்! நம்முடைய எதிரி மிகவும் பலமான தலைவனை சரணடைந்துவிட்டான். ஆதலின் எனக்கு ஒன்றும் தோற்றவில்லை. தாங்களே அதற்கு வழிகாட்டவேண்டும்.

விசு. என்ன இராமா! என்னிடத்திலா இவ்விதம் இயம்புகின்றனை. எல்லாம் எனக்குத் தெரியும். இராகவா! ஆஞ்சநேயனுலும் சரி, அல்லது மும்மூர்த்திகளே சகுந்தனைக் காக்க எண்ணினுலும் சரி என் சபதம் எப்படியும் நிறைவேறவேண்டும்.

இரா. ஆ! .... பிரபோ! மாருதியை சமாதானம் செய்து சகுந்தனை இங்கு அழைத்துவா அங்கதனை அனுப்பியிருக்கிறேன். அவன் வந்தவுடன் தக்க ஏற்பாட்டைச் செய்கின்றேன். (அங்கதன் திடீரென அங்கு குதித்து வணங்கல்)

அங். என் ஐயனே! சகுந்தனை அனுப்ப மாருதி இசைந்தார். ஆனல் அவர் தாய் குறுக்கிட்டு அவரை அவ்விதச்செய்கையினின்றும் தடுத்து விட்டார். ஹநுமானும் மந்திரத்தில் அடங்கிய அரவம் போல் நடுங்கி நிலத்தினில் சாய்ந்து விட்டார். இனிச் சகுந்தனை அழைத்து வருவது முடியாத காரியம்.

விசு. மாருதிக்கு அவ்வளவு தைரியமா! இராமா! புறப்படு உடனே.

இரா. ஆம். வேறு வழியில்லை. இலக்ஷ்மணு புறப்படு. ஸ்வாமி நமஸ்கரிக்கின்ரேம் (வருத்தத்துடன் செல்லல்)

விசு. இராமா! சூரிய அஸ்தமனசமயம் நான் யமுனநதிக்கரையில்

இருப்பேன், ஆதலின் சகுந்தனின் சிரம் அங்குவந்து சேரட்டும்.

இரா. உத்திரவு. (செல்லல்)

விசு. நாரதரே! என் சபதமா வீண் போகும். ஒருபோதுமில்லை (பரந்தாமன் பழங்களுடன் பிரவேசம்) ஏன் இவ்வளவு நேரம்

பரந். பழங்கள் கைக்கு எட்டவில்லை—மன்னிக்க வேண்டும். மாமேறிப் பறித்து வந்தேன்.

விசு. அப்படியா! உள்ளே வா ஆகாரம் கொள்ளலாம். (உள்ளே செல்லல்)

பரந். ஆஹா! நல்லவேளை. இன்றையதினப் பாடம் கேட்கவில்லை.... மறந்துவிட்டார்.... சீ சீ! இவரிடம் வேலைபார்ப்பது மகா கஷ்டம். என்னமோ நாரதரிடம் சொல்லியிருக்கிறேன். அவர் என்னசெய்கிருரோ—பார்ப்போம். (செல்லல்)

[பதினொன்றும் களம் முடிகிறது]

களம் 12.

இடம்:— அஞ்சனை ஆகிரமம்.

காலம்:— பிற் பகல்.

நடர்:— அங்கதன், மாருதி, சகுந்தன், அஞ்சனாதேவி, நாரதர்.

(அஞ்சனை நிஷ்டையிலிருக்கிறாள். சகுந்தன் வருத்தத்துடன் ஆசிரமவாயிலில் அமர்ந்திருக்கிறான். ஆஞ்சநேயர், ஒரு புறத்திலமர்ந்து ராமகானம் செய்கிறார்— அங்கதன் பிரவேசித்து அஞ்சனையை வணங்கி, ஓர்புறம் நிற்கிறான்.)

அங். குருவார்த்தையை சிரமேற்கொண்ட கோதண்ட ராமனையும், தாய் மொழிதவரு வாயுதனையனையும் எங்ஙனம் யான் ஒன்று சேர்க்கமுடியும். ஸ்ரீராமா நீரே சரணம். (மாருதியின் அருகிற்சென்று) மாருதி ! உமது வலுவைச் சிதைத்த பின்னரே சகுந்தனின் சிரத்தை தமது குருவுக்குக் கொடுப்பதாகக் கோதண்ட இராமர் கூறி அருகில் உள்ள சமவெளியில் வந்திருக்கிறார். இவ்விடத்தில் வந்து எதிர்த்தால் இங்கு வசிக்கும் தபோநிதிகளுக்கு இடையூறு உண்டாகுமென்றெண்ணி உம்மை உடனே அங்கு அழைத்து வரும்படி கூறினார்.

ஹநு. முற்றுமுணர்ந்த அங்கதா ! ஸ்ரீராமச் சந்திரமூர்த்தி என்னிடமிருக்க, அங்கு எப்படி அவர் இருக்கமுடியும். சமவெளியில் நிற்கும், அக்கோதண்ட இராமனால் என்னை ஒருக்காலும் எதிர்க்க முடியாது வேண்டுமென்றால் அதை நிரூபிக்கின்றேன்.

அங். சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த வீரஸிம்ஹமே ! தம்முடைக் கருத்து எனக்குச் சரிவர விளங்கவில்லையே.

ஹநு. இதோ விளங்கவைக்கிறேன் ! (கைகூப்பி) அங்கதா. இதோ என் மார்பை கவனித்துப்பார். (ஸ்ரீராமனை நினைத்து மயங்கி நிற்றல்)

அங். (உற்று நோக்கி) மகா பலம் பொருந்தியவரே! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே.

ஹநு. (சிரித்து) ஸ்ரீராமசந்திர பிரபுவுக்கு நீ உண்மையான தொண்டனுயின் அவரை நன்கு தியானித்து உற்றுக்கவனி அங்கதா! உன்னுடைய ஊனக் கண்ணை உபயோகிக்காது ஞானக்கண்ணால் பார்.

அங். (கவனித்து) ஆ! என்ன ஆச்சர்யம். (அவரைச்சுற்றி நமஸ்கரித்து எழுந்து) இக்காக்ஷி என்னைப் பரவசப் படுத்துகிறதே. ஸீதா இலக்ஷ்மண பரதசத்ருக்கன சமேதராய் ஸ்ரீராமர் உன்னதமாக தமது திருமார்பிற் அமர்ந்திருக்கும் அதி மேன்மையான காக்ஷியின் வைபவத்தை நாயேன் எவ்வாறு புகழ்வேன். தைரியமுள்ள மாருதி! அடியேனை மன்னிக்க வேண்டும் ஸ்ரீராமனே நீங்கள் — நீங்களே ஸ்ரீராமன்.... ஒப்பற்ற வீரரே! இதன் தாத்பர்யம் யாதோ! அறிகிலேன்.

ஹநு. நண்பா! யாவற்றிற்கும் காரணம் ஸ்ரீ தாரகமந்திரமே! .... சரி! அங்கதா! ஸ்தூல சரீரத்துடன் வந்திருக்கும் ஸ்ரீ ராமனைக் காண, இதோ வருகின்றேன். (தாயைப்பார்த்து வணங்கி) சரி இவர்கள் நிஷ்டையிலிருக்கட்டும். ஏ சகுந்தா! இவ்விடத்திலேயே கவலைப் படாமல், ஸ்ரீராம நாமத்தை ஜபித்துக் கொண்டிரு. நான் சீக்கிரம் வருகிறேன். அங்கதா புறப்படு. (மாருதியும், அங்கதனும் செல்லல்)

சகுந். அந்தோ! என் பொருட்டு, மாருதியும், அஞ்சனு தேவியும் என்ன கஷ்டப் படுகிறார்கள் இவைகளை எல்லாம் நான் பார்த்தும், கேட்டும் வாளா இருப்பதில் என்ன பயன்? சகுந்தன் இவ்வளவுகாலம் நீதியுடன் அரசுபுரிந்துவிட்டு, கடைசியில் ஸ்ரீராமனுக்கும் மாருதிக்குமன்றே சண்டையை உண்டாக்கினன் என எல்லோரும் பழிசொல்வார்களே, ஆ! அப்பழிக்கு ஆளாவதைக் காட்டிலும் நம் உயிரை

நாமே மாய்த்துக் கொள்ளலாம். ஆம் அதுவே நல்ல யோசனை. இவ்விடத்தில் நாம் இறந்தால் இத்தபோ வனம் மாசடைந்து விடும். ஆதலின் அருகில் செல்லும் புண்ணிய யமுனைநதியில் வீழ்ந்து உயிரைப்போக்கிக் கொள்கிறேன். என் அதிர்ஷ்ட வசமாக அஞ்சனாதேவி நிஷ்டையிலிக்கிறார்கள். இதுதான் சமயம். (மெல்ல நழுவி ஓடி விடுகிறான்)

அஞ். (சிறிது நேரங்கழித்து விழித்துச் சுற்றிப்பார்த்து) மாருதி ! மாருதி !! எங்கே அவனைக்காணோம். ஒருக்கால் நான் தியானத்தில் ஈடுபட்டிருப்பதை அறிந்து, இதற்குப் பங்கம் செய்யலாகாதென எண்ணி, ஸ்ரீ ரா ம னை ச் சந்திக்கச் சென்றனனோ....எதற்கும் சகுந்தனைக் கேட்டால் உண்மை விளங்கும். சகுந்தா ! இங்குவா ! என்ன பதிலைக் காணோம். (எழுந்து ஆசிரமத்தின் உட்சென்று திரும்பி) ஆ மோசம் ! மோசம் ! இதென்ன இவன் சொல்லாமல் ஓடிவிட்டான். அஸ்தமனவனை அவனை எப்படியும் நான் காப்பாற்ற வேண்டுமே ! சீ ! அவனைஎப்படி யும் தேடிப் பார்க்கவேண்டும். (அவசரமாக ஓடுகிறாள்—**நாரதர்** மற்றொரு புறம் பிரவேசம்)

நார. அடடா ! நாம் ஒரு சிறுகலகத்தைச் செய்ய அதன் போக்கு மிகவும் விபரீதமாகவன்றோ செல்லுகின்றது. ஆயினும் நாம் செய்த கலகத்தால் விசுவாமித்திரரின் கர்வம் குன்றிவிடும். வீரத்திற்கும், பக்திக்கும், உபகாரத்திற்கும், பொறுமைக்கும் தியாக புருஷராகிய ஆஞ்சநேயரின் கீர்த்தியும் மாத்ருபக்தியும் நன்கு விளங்கும்....ஆ ! நேரமாயிற்று. மாருதியும், இராம லக்ஷ்மணர்களைச் சந்திக்கச் சென்றுவிட்டார். பேஷ் சகுந்தா இனி நீ பயப்பட வேண்டாம். வா வெளியே ! —என்ன பதிலைக்காணோம் ஓகோ, பகைவர் யாரோ தம்மை அழைக்கின்றார் எனப்பயந்து பதில் கூறாதிருக்கிறானே! ஐயோ பாவம், சகஜந்தானே. (ஆசிரமத்தின் அருகிற்சென்று).ஏ சகுந்தா ! பயப்படாதே. நான்தான் நாரதர் வெளியவோ ! .... இதன்ன கஷ்டம்

(உள்ளே எட்டிப்பார்த்துத் திகைப்புற்று.) அடடா! இதென்ன கஷ்டம் ஒருவரையும் இங்குகாணேமே (ஞான திருஷ்டியால் சிந்தித்து) ஓகோ! அப்படியா சமாசாரம். அடமூடமே! இதோவந்தேன். நாரதனின் வார்த்தை பொய்யாகலாமோ. (ஓடுகிறார்)

[பன்னிரண்டாம் களம் முடிகிறது.]

களம் 13.

இடம்:— அஞ்சன மலையை அடுத்த ஓர் சமவெளி.

காலம்:— பிற் பகல்.

நடர்:— அங்கதன், ஹநுமான், இலக்ஷ்மணர்.

(**மாருதியும் அங்கதனும்** பிரவேசித்தல்.)

அங். மாருதி! ஸ்ரீராகவனின் கட்டளைப்படி தம்மை இச்சமயம் இங்கே அழைத்து வந்தேன். தாம் இவிடமே நில்லும். சீக்கிரமே நான் அவரை அழைத்து வருகிறேன்.

ஹநு. உன்னிஷ்டம். (அங்கதன் செல்லல்) திரிபுரமதனை எரித்த சிவபெருமானே! என் தாயின் கட்டளையை அடியேன் காப்பாற்ற அருள்புரியவேண்டும். நாயேனுக்கும் ஸ்ரீராமனுக்கும் உள்ள அன்பை இன்னும் அதிகப் படுத்தல் வேணடும். இல்லையேல் என்னை ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் இணையற்ற பாதங்களில் சேர்த்திடல் வேண்டும். (ராமத்தியானம் செய்ய அங்கதன் பிரவேசம்)

அங். உமது வலுவைச்சிதைக்க, ஸ்ரீராமர் முன்னதாக இலக்ஷ்

மணப்பெருமாளை அனுப்பியிருக்கிறார். இப்பொழுதாவது அவரைச் சரணடைந்து, சகுந்தனை அவருடன் அனுப்பி விடுவதாக அவ்விடம் உறுதிமொழி சொல்லும்.

ஹநு. சகுந்தனைக்காத்து, சரண் அடையக் காத்திருக்கின்றேன்.

அங். வீண் பேச்சுக்கள் பேசவேண்டாம். அதோ இலக்ஷ்மணர். (இலக்ஷ்மணர் பிரவேசிக்க மாருதி ஓடி நமஸ்கரித்து நிற்கிறார்)

இல. பேஷ்! மாருதி! நல்லகாரியம் செய்தனை. நம் நட்பு நீடித்திருக்க வேண்டுமாயின் உடனே சகுந்தனைக் கொண்டுவா சீக்கிரம் .... இல்லையேல் ....

ஹநு. பிரபோ! அது ஒருநாளும் முடியாத காரியம். என் உயிர் போயினும் நான் என் அன்னைக்குக் கொடுத்த வாக்கைத் தவறி நடக்கமாட்டேன். ஆதலின் என்னை கோபித்துக் கொள்ளுதல் தர்மமன்று. வேண்டுமாயின் என்னைக் கொன்று சகுந்தனை அடையலாம்.

இல. ஆ! மாருதி என் வார்த்தையை மறுத்துரைக்க உனக்கு ஆண்மையுமுண்டோ. வீரனே! இதுகாறும் உன்னை எவ்வளவோ பெருமிதமாக எண்ணியிருந்தேன். இப்பொழுதன்றோ தெரிகின்றது உன் இறுமாப்பு. இருக்கட்டும். ஆஞ்சநேயா! உனக்கு மும்மூர்த்திகளின் உதவியிருந்தாலும், வரபலமிருந்தாலும், உன்னை எதிர்க்கத் துணிந்தேன். எடு உன் கதையை.

ஹநு. ஐயனே! மெத்தசந்தோஷம். தாம் தம்முடைய திருக்காத்தால், விடும் பாணங்களை நான் என்னுடைய சரீரத்தில் பெற்றுக்கொள்ளப் பூர்வத்தில் என்ன புண்ணியம் செய்தேனோ! (ஓரிடமமர்ந்து) பிரபோ! நேரமாகின்றது. விடும் பாணங்களை.

இல. சரி! எடு ஆயுதத்தை.

ஹநு. பிரபோ! உமது பாணங்களைத் தடுக்க எனக்கு ஆயுதம் தேவையில்லை. தாரக நாமமென்னும் சிறந்த ஆயுதம் ஒன்றே போதும் (எழுந்து கைகூப்பி) நீண்ட காத்தை யுடையவரும், பத்மம் போன்ற நேத்திரங்களை யுடைய வரும், பிறந்தது முதல் களங்கமற்ற முகவிலாசம் பொருந் தியவரும், சியாமள ஸ்வரூபியும், ஆண்மையில் நிகரற்ற வரும், தருமாத்மாவும் ஆகிய ஸ்ரீராமசந்திர மூர்த்தியை ஸ்மரணை செய்கின்றேன். ஸ்ரீராம, ராம, ராம

இல. என்ன பேசாமலிருக்கின்றனை .... இதென்ன பதிலைக் காணோம் .... (சற்று அருகிற்சென்று) அங்கதா! இதென்ன தியானம்.

அங். ஸ்ரீராமத்தியானம்.

இல. என்ன பக்தி ! என்ன தேஜஸ் ! ஹா ! சர்வலோக ரக்ஷ கனை நம் அண்ணனிடத்து அளவுகடந்து பக்தி செய் வது என் மனத்தைப் பரவசமடையச் செய்கின்றதே. ஆ! யான் யாது செய்வேன் .... அங்கதா ! என் மனம் மாரு தியின்மேல் இரக்கங்கொள்ளுகிறது. பாணத்தைப் பிர யோகிக்கலாமென்றாலோ அ வ ன் நிராயுதபாணியாய் நிற்கிறான். இந்த தர்மசங்கடத்திற்கென்ன செய்வது.

அங். பிரபோ! தர்மா தர்மங்களை யோசிப்பதற்கு இது சமயமல்ல. வீணாகக் காலத்தை கழிப்பீர்களே ஆயின் அண்ணா கோபிப் பார். ஆதலால் அவர் கட்டளைப்படி பாணத்தால் அடித்து வீழ்த்தும் மாருதியை.

இல. ஆம் .... (பல அம்புகளை எய்கிறார். யாவும் பக்கங்களில் சிதறி விழுகின்றன) ஆ ! நினைத்தேன் ! நினைத்தேன். அங்கதா! மோசம் ! ஓடு உடனே அண்ணனிடம். மாருதியை வெல்ல என்னால் முடியாது.

அங். உத்திரவு— (ஓடுதல்)

இல. ஆ! இது என்ன! என்மனம் இவ்வாறு நிலைகுலைந்து தவிக்கின்றது .... (ஆயுதங்களைக் கீழேவைத்து அருகிற்சென்று கவனித்து) அண்ணுவிடம் மெய்யன்பு கொண்டு, பிரும்ம ஸ்வரூபியாக விளங்கும், பக்தசிரோன்மணியாகிய ஒப்பற்ற வாயுபுத்திரரை நாமோ எதிர்க்க வல்லோம். (உற்று நோக்கி) ஆ! இதென்ன! அத்வைத ஸ்வரூபரும், ஆனந்த ஸ்வரூபரும், சைதன்னிய ஸ்வரூபரும், சுத்த ஸ்வரூபரும், சத்துவ ஸ்வரூபருமாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, இவருடைய அகன்ற மார்பில் பிரகாசிக்கின்ருர் .... (கைகூப்பி) வஜ்ரம் போன்ற பயங்கரமான சரீரமுள்ளவரும், ஜிதேந்திரியரும், புத்திமான்களிற் சிறந்தவரும், பிரஸன்னரும், ஸ்ரீராம என்னும் தாரகனை தன் மனத்திடை நிறுத்தியவருமாகிய ஸ்ரீராம தூதரை யான் தியானிக்கிறேன். இனி என் உயிர் உள்ள அளவும் அவரை எதிர்க்க மாட்டேன். (மாருதியின் பாதத்தருகிலமர்ந்து இராமத்தியானம் செய்தல்)

[பதின்மூன்ருங் களம் முடிகிறது.]

களம். 14

இடம் :— யமுனாநதிகரை.

காலம் :— மாலை அஸ்தமன சமயம்.

நடர் :— விசுவாமித்திரர், சகுந்தன், நாரதர், அஞ்சனாதேவி

விசு. (தர்ப்பாசனத்துடன் வேகத்துடன் வருகிறார்— ஆகாயத்தைப் பார்த்து) அடடா! அஸ்தமிக்க இன்னும் சிறிது நாழிகைதானே இருக்கின்றது. இன்னும் சகுந்தனது சிரத்தைக் காணோமே. இராமனுடைய வார்த்தை ஒரு நாளும் பொய்யாகாதே! அந்தோ இராமனும் மாருதியும் என் பொருட்டு இந்நேரம் எவ்வளவு கஷ்டப்படுவார்கள். அடடா! இவ்வளவிற்கும் காரணம் நாரதரன்றோ! .... சரி சந்தியாவந்தனத்தை முடித்து ஜபம் செய்வோம் நாழியாகின்றது. (ஓர்புறம் ஆற்றில் இறங்கி அர்க்கியம் விட்டுக் கொண்டிருக்கிறார் — மற்றொருபுறம் சகுந்தன் பிரவேசித்தல்)

சகு. ஆ! நல்லவேளை. நம்மை ஒருவரும் கவனிக்கவில்லை. சீ இனி இவ்வுயிர் வேண்டாம். நம் அதிர்ஷ்டவசமாக இந் நதியில் நீர் நிறைந்து ஒடுகிறது. ஆதலின் இதோ தோன்றும் குன்றின் சிகரத்திலிருந்து தாவிக் குதித்து உயிர் துறப்போம். (சிகரத்தை யடைந்து) நாரதப்பிரும்மமே! பல அபக்கியாதிகளிலிருந்தும் நீங்க நான் இவ்வற்ப உடலை இப்புண்ணிய நதியில் விட்டுவிடுகின்றேன். (குதிப்பதற்கு கையைத்தூக்க, நாரதர் ஓடிவருகிறார்.)

நார. பொறு! பொறு! சகுந்தா.

சகு. சத்குருவே! இப்பாவியைத் தடுக்க ஏன் இங்கும் வந்தீர்.

நார. இதற்குள்ளாக உன் ஆயுள் முடிவடையவில்லை. அதற்கு இன்னும் பல்லாண்டுகள் இருக்கின்றன. தற்கொலைசெய்து கொள்ளுதல் உன்னைப்போன்றவர்களுக்கு அழகல்ல.

கீழே இறங்கிவா சீக்கிரம். யாவும் இனிது முடிக்கின்றேன். (சகுந்தன் ஓடி வருதல்.) சகுந்தா. அதோ பார் விசுவாமித்திரர். ஜபம் செய்ய கரைக்கு வருகிறார்.

சகு. ஆம்! அவரைப்பார்த்தால் எனக்கு மிகவும் பயமாய் இருக்கிறது.

நார. சீ! நான் அருகில் இருக்கையில் உனக்கென்ன பயம். சொல்வதைக் கவனித்துக்கேள். கரைக்கு வந்ததும், கீழே அமர்ந்து, கண்மூடித் தியானம் செய்வார். அவ்வமயம் நீ மெதுவாக மார்பினால் இங்கிருந்தே மெல்ல நகர்ந்து அவர் பாதத்தில் தலையை வைத்துக்கொண்டு பிரும்ம ரிஷியே! அபயம்! அபயம்!! எனக் கத்து. பின்னர் ஆக வேண்டியதை யான் பார்த்துக்கொள்கிறேன்—ஸ்—வருகிறார். மறைந்து கொள்வோம் வா, (விசுவாமித்திரர் வருகிறார்)

விசு. ஆ! இதென்ன! இன்னும் இராமனைக்காணவில்லை பொறுத்தது பொறுத்தோம் இன்னும் சிறிது நேரம் தாமதிப்போம். ஆம்! அதற்குள்ளாக ஜபத்தையும் முடித்துவிடுவோம். (அமர்ந்து கண்மூடி ஜபம் செய்ய, சகுந்தன் மார்பினால் நகர்ந்த வண்ணம், விசுவாமித்திரரின் பாதத்தில் சிரசை வைத்தல்)

சகு. பிரும்மரிஷே! அபயம்! அபயம்!!

விசு. தீர்க்காயுஷ்மான் பவ! யாரப்பா நீ? எழுந்திரு. கவலைப் படாதே.

சகு. முனிவர்திலகமே! அடியேன் சகுந்தன். ஸ்ரீ ராமனின் கணைக்குப்பயந்து தம்மைச் சரணடைந்தேன்.

விசு. அடே மகா பாவி! என்ன மோசம் செய்தனை. உன்னால் இந்நேரம் இராமனும் மாருதியும்........

சகு. பிரபோ! இனிநான் நகர் செல்லலா மல்லவா.

விசு சீ திருடனே! இவ்வாறு நடிக்க உனக்கு யார் கற்றுக் கொடுத்தது. [அஞ்சனை பிரவேசம்]

அஞ். ஆ! சகுந்தா!

சகு. (நமஸ்கரித்து) தாயே மன்னிக்கவேண்டும். விசுவா மித்திரரே எனக்கு அபயம் கொடுத்துவிட்டார்.

அஞ். என்ன! விசுவாமித்திரர் அபயம் கொடுத்தனரா! முனிவரே! இதென்ன வேடிக்கை.

விசு. தேவீ! நான் என்னசெய்வேன். எனக்கு ஒன்றும் புரிய வில்லையே. ஆ! இந்நேரம், ராமனும் மாருதியும்.

அஞ். சரி புறப்படுங்கள் யுத்தகளத்திற்கு. அவர்களை உடனே காண வேண்டும்....

விசு. தாயே! இதோ வந்தேன்.

அஞ். ஆ என்ன கஷ்டம். (ஓடுகிறாள்)

விசு (பின்தொடர்ந்து ஓடிக்கொண்டே.) நாரதர் நகைப்பிற்கு ஆளானேனே (நாரதர் மெல்ல வெளிவந்து)

நார. இன்னும் கொஞ்சம் வேகமாக ஓடும்! பலே சகுந்தா! நன்றே நடித்தாய். அதனால்தான் வெற்றிபெற்றாய்.

சகு. எல்லாம் தங்களுடைய ஆசீர்வாதம் தான். ஸ்வாமி! இனி நான் உத்திரவு பெற்றுக்கொள்ளலாமல்லவா

நார. இராமனிடமும், விசுவாமித்திரரிடமும் விடைபெற்றுச் செல்லலாம் வா.

சகு. இனி என்னால் ஒருவருக்கும் மனவருத்தம் இல்லாமல் செய்யும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நார. சரி! நான் அவ்வப்போது சொல்லுகிறபடி அங்கு

நடித்து விடு. யாவும் இனிது முடியும்.
(இருவரும் செல்லல்)

[பதினுன்காம் களம் முடிகிறது]

களம் 15.

இடம்:— அஞ்சனை மலையை அடுத்த ஓர் சமவெளி.

காலம்:— மாலை.

நடர்:— அங்கதன், இராமபிரான், மாருதி, இலக்ஷ்மணர், அஞ்சனுதேவி, நாரதர், விசுவாமித்திரர், சகுந்தன், பரந்தாமன்.

(ஹநுமார் அமர்ந்து ஸ்ரீராமத் தியானத்தில் ஈடுபட்டிருக்க, இலக்ஷ்மணன் ஓர்புறம் அமர்ந்து மெய்மறந்து ஆஞ்சநேயரின்பால் ஈடுபட்டிருக்கிறுன் — அங்கதனும் ஸ்ரீராமனும் பிரவேசித்தல்)

அங். பிரபோ ! இதோ மாருதி !

இரா. ஆ ! இதென்ன ! இலக்ஷ்மணனும் இவ்வாறு மாறி விட்டான். ஆஞ்சநேயா !

ஹநு. பிரபோ! இதோ வந்தேன். (பாதத்தில் வீழ்ந்து எழுகிறுர்)

இரா. சரி என்ன சொல்கின்றுய் இப்பொழுது.

ஹநு. சற்குண தாரக ராமா! அடியேன் மீது ஒரு குற்றமுமில்லை. பிரபோ ! எவ்விதமாயினும் தாயின் வாக்கைக் காப்பதாக உறுதி கூறிவிட்டேன். அதனின்றும் மாறி மாத்ரு துரோகியாக மாட்டேன்.

இரா. வாயுபுத்திரா! நானும் என் குருவின் வாக்கை நிறைவேற்று வதாக வாக்களித்து விட்டேன். ஆதலின் அதனின்றும்

யானும் பிளமுடியாது. ஆஞ்சநேயா ! ஓர் அபாரதிக்கு நீ எவ்வாறு அபயம் கொடுக்கலாம்? இது முறையோ.

ஹநு. முன் பின் யோசியாது, குருவின் பணியைச் செய்து முடிப்பதாகச் சபதம் செய்ததனல், நிரபராதியான சகுந்தன்கொல்லப்படுவது சரியோ! ஆதலின் இவ்விஷயத்தில் தங்கள் வார்த்தையை மீட்டுக் கொள்ளுதல் நலம். இல்லையேல் என்னைக்கொன்று உமது வாக்கை ஈடேற்றிக் கொள்ளும். நான் உயிருடன் இருக்கும்வரை தாம் சகுந்தனை அணுகமுடியாது.

இரா. அவ்வாருயின் சகுந்தன் பொருட்டு என்னை எதிர்க்கவோ துணிந்தனை. சுத்தவீரன் ஆயின் எடுத்துக்கொள் உன் ஆயுதத்தை. பேடித்தனமாக நிற்கலாகாது.

ஹநு. பேடியோ ! வீரனே ! உம்மை ஒருநாளும் நான் எதிர்க்க மாட்டேன். இஷ்டமாயின் இதோ நிற்கின்றேன். உமது கணையால் என்னை அடித்து வீழ்த்துங்கள்.

இரா. யுத்ததருமங்களை நன்கறிந்த நீயோ இவ்விதம் பேசுவது எடுத்துக்கொள் உன் ஆயுதத்தை.

ஹநு. ஒருபொழுதும் இல்லை. என் ஐயனே ! நேரமாகின்றது பிறகு காலம் தவறி விடும்.

இரா. ஓகோ ! சாத்வீகப் போராட்டமோ. பார்க்கின்றேன் உன் சாமார்த்தியத்தை. (இராமர் பல பாணங்களால் அடித்தும் இராமத்தியானத்தில் ஈடுபட்டிருக்கும் மாருதியின் மேல் அவைகள் படாது சிதறி விழுகின்றன) சீ ! இவனை இனி பிரும்மாஸ்திரத்தால் வீழ்த்துகின்றேன் பார்.

ஹநு. பிரபோ ! அதை என்மேல் பிரயோகிப்பதில் பயனில்லை

இரா. பார்க்கின்றேன். (எய்தும் பயனற) ஆ ! இதென்ன சங்கடம் .... சரி பசுபதியின் அஸ்திரத்தை இவன்மேல் பிரயோகிப்போம். ஆஞ்சநேயா ! பாய்ந்துவரும் பசுபதியின்

கணைக்கு நீ தப்ப முடியாது. இனி என் செய்வாய்

ஹநு. பசுபதியின் சக்தியாகிய அடியேனை அது பாழ்படுத்காது ஆதலின் அதை விடுத்து வேறு பாணம் எய்யும்.

இரா. நீ நினைத்தது தவறு அதன் சக்தியை இதோ காட்டு கின்றேன் பார். (எய்தும் பயனில்லாதது கண்டு) அந்தோ இதென்ன விபரீதம். இருமூர்த்திகளின் அஸ்திரங்களும் வீணாயினவே. அந்தோ! இவ்வாறு நடக்கும் என்று நான் நினைக்க வில்லையே .... சரி கடைசியாக நாராயணா ஸ்திரத்தை பிரயோகம் செய்யப் போகிறேன். இதற்கு என்ன புகல்கிறாய்.

இல. அண்ணா ! யோசித்துச் செய்யும்.

ஹநு. ஆ ! இனி நான் உயிர்வாழ ஏதுவில்லை. ஒப்பற்ற வீரரே ! சிறந்த அந்த நாராயண அஸ்திரத்தைத் தாங்கள் அடியேன் மீது விடுவீர்களேயாயின், நான் இறப்பது நிச்சயம். பிரபோ ! நான் இறப்பதற்கு அஞ்சுகின்றேன் என எண்ணவேண்டாம். உண்மையாக, நான் என் தாயின் வாக்கைக் காக்கும் பொருட்டு, தமது கரத்தால் இறக்கப் போகின்றேமே என்பதை நினைக்க, என் மனம் குளிர்ந்து சந்தோஷம் கொள்கிறது. ஆதலின் சீக்கிரமே பாணத்தை பிரயோகம் செய்யும். என் ஆசிரியர் சூரியபகவானும், மறைகிறார் — சீக்கிரமே என்னைக்கொன்று, சகுந்தனை வென்று, சிரத்தைக்கொண்டு குருவின் வார்த்தையை முடிக்க வேண்டுகின்றேன். (கீழ் அமர்ந்து கைகூப்பி) ஏ ! நாராயணாஸ்திரமே! அடியேனை என் ஐயன் ஸ்ரீராமபிரானின் பாதத்தில் சேர்த்திடுவாய். (கண் மூடுகிறார்)

இல. ஆ ! பிரிய மாருதி ! (மூர்ச்சையாகிறார்)

இரா. (கையில் நாராயணா ஸ்திரத்தை எடுத்து மாருதியின் மார்பிற்குக் குறி வைக்கிறார் கை நடுங்குகிறது) ஆ! ஆஞ்சநேயா ! என்மனம் தளர்கின்றது. அந்தோ இதற்கோ நான்

இப்புவியில் பிறந்தேன். ஐயோ! என் மனம் என்னைக் கொல்லாதோ! (கையில் அம்பை எடுத்து) ஒப்பற்ற ஆஞ்சநேயா! நான் உன்னை என் கரத்தால் (கண்களில் நீர் ததும்பல்—விசுவாமித்திரரும் அஞ்சனையும் பிரவேசித்தல்—அஞ்சனை மாருதியை மறைத்து நிற்கிறாள் விசுவாமித்திரர் இராமன் கரத்தைப் பிடித்துக்கொள்ளுகிறார். தேவர்கள் புஷ்பமாரி தூவுகின்றனர். இராமர் பிரமித்தல். இலக்ஷ்மணர் எழுந்து நிற்றல்]

விசு. பொறு! இராமா! பொறு! என்னுடைய நிபந்தனையினின்றும் உன்னை மீட்டுவிட்டேன். அஸ்திரத்தை எதாஸ்தானத்தில் உடனே வைத்துவிடு. (அஸ்திரத்தை வாங்கி அம்பறாத்தூணியில் வைக்கிறார்)

இரா. குருவே! சரணம்! சரணம்! தங்கள் கிருபையினால் புனர் ஜன்மமெடுத்தேன்.

விசு. இராமா! உன் குருபக்திக்கு மெச்சினேன்.

இல. சத்குருவே! தம்மைக் குருவாகக் கொண்ட நாங்கள் பூர்வஜன்மத்தில் என்ன புண்யம் செய்திருக்கவேண்டும்.

விசு. நன்று! அஞ்சனாதேவி! உங்கள் சபதமும் நிறைவேறி விட்டது. இனி என்மேல் குறை கூறாதீர்கள்.

அஞ். சரி! இருவரையும் ஒன்று சேர்த்துச் செல்லும்.

இரா. அஞ்சனை அன்னையே நமஸ்கரிக்கின்றேன். வித்தியாஸமாக என்னை ஒன்றும் நினைக்கவேண்டாம்.

அஞ். இராகவா! இதில் பிழையொன்றும் இல்லை. நாம் வீணே வருந்தல் வேண்டாம். மாருதி!

மாரு. தாயே! இங்கு எங்கு வந்தீர்கள்.

அஞ். உன்னைச் சந்தோஷப்படுத்துவதற்காகத் தான். ஸ்ரீராமா! இனி நீங்கள் இந்தச் சிறுவிஷயங்களையெல்லாம் மறந்து

ஒற்றுமையுடன் வாழ்வீர்களாக.

இரா. அம்மா! என் குருநாதனின் சமய தரிசனத்தால், எல்லா வினைகளும் என்னைவிட்டு விலகின. மாருதி என் அருகினில் வா (மாருதி ஓடிவர அவரை அன்புடன் தழுவுகிறார். புஷ்பமாரி பொழிகின்றது) மாத்ருபக்தியிற் சிறந்த பிரிய ஆஞ்சநேயா! நானே உன்னை வெல்ல வல்லான் ஒருநாளுமில்லை. உலகமே அழிந்தாலும் உன் உயிர் உடல், ஆவி, கீர்த்தி இவைகள் என்றும் அழியாது நீ சிரஞ்சீவியாக வாழ்வாயாக! (மாருதி வணங்கல்)

அஞ். அதுவே! நான் கோரியது.

இல. அண்ணா! இந்தப் பரமானந்தக் காக்ஷியைப் பார்ப்பேனோ என எண்ணினேன். (நாரதர் பிரவேசம்)

நார. உண்மையாகவே நானும் அவ்விதமே எண்ணினேன்.

இரா. மாதவரே! வரவேண்டும். தாம் நினைத்தால் இம்மாதிரி காக்ஷிகளை வேண்டியன செய்து விடுவீர் என்பதை நான் அறியாதவன் அல்லனே.

நார. இவை எல்லாம் ஸ்ரீமன் நாராயணனின் திருவிளையாட்டுத் தானே! என்ன விசுவாமித்திரரே! சூரியன் அஸ்தமனமாகின்றதே.

விசு. ஸ். பேசாமலிரும்.

நார. அப்படியல்ல உமது சபதம் வீண் போகலாமா. ஒரு நாளும்கூடாது. சரி! எல்லோரும் மேற்கேபாருங்கள்—(அங்குமறைந்திருக்கும் சகுந்தன் மார்புறமாக ஓடிவந்து விசுவாமித்திரரின் பாதத்தில் தலையை வைத்துக்கொள்கிறான்) இப்பொழுதுதான் சூரியன் அஸ்தமனமாகிறார் ஆதலின், யாவரும் கீழேபாருங்கள் மாருதி! விஸ்வாமித்திரரே, அஞ்சனாதேவி நீங்கள் யாவரும் உங்கள் சபதத்தை நிறைவேற்றினீர்கள்—சகுந்தா இனி நீ எழுந்திரு.

நாரதரே! தாம் கூறுவதின் மர்மம் விளங்கவில்லையே.

விசுவாமித்திரரே! சகுந்தனது சிரம் தமது பாதங்களில் விழவேண்டுமென்றல்லவா தாங்கள் சபதம் செய்தீர்கள். அவன் இப்பொழுது பணிந்தகாலத்தில் அவ்வாறே நிகழ்ந்து விட்டது. இனித் தாம் திருப்தியடையவேண்டும். சற்றுநேரத்திற்கு முன் யமுனைக்கரையில் நீர் அவனை வாழ்த்தியபடி அவனை மறுபடியும் யாவரும் அறிய ஆசி கூறும்.

பேஷ் நாரதரே! சகுந்தா! நீடுழிகாலம் நீ கீர்த்தியுடன் ஸ்ரீ ராகவனின் நண்பனுகவே அரசுபுரிவாய்.

பேஷ்! இனி இராமா! உன்வாக்கும் மெய்த்தது. யான் இழைத்த கலகமும் சபதமும் இனிது முடிந்தது. புத்தியிற் சிறந்த வெற்றி வீராகிய பக்த ஆஞ்சநேயரே! சாத்வீகப் போராட்டத்தில் வெற்றியடைந்து, தமது தாயின் வாக்கைக் காப்பாற்றிய தமது திறமையைத் தேவர்களும் புகழ்கிறார்கள். நீரே புத்திமான். உலகத்தில், பிரஜைகள் வல்லானிடம் தம் தூய கருமத்தை நிறைவேற்றிக் கொள்ள எண்ணிடில், உம்மைப்போலப் பொறுமையாக, சாத்வீகப் போராட்டத்தைச் சலிக்காமல் சந்தோஷமாகச் செய்வார்களே யாயின் அவர்கள் திண்ணமாய் வெற்றி பெறுவர் என்பதில் முக்காலும் சந்தேகமில்லை.

சகுந்தா! இனி அறிவாளிகள் பலர் இருக்கப்பட்ட சபையில் ஒருவரை மாத்திரம் முதன்மை வைத்துப்பேசாதே. ஜாக்கிரதை.

அப்படியே (எல்லோரையும் நமஸ்கரித்தல்)

என் குருவின் கருணையினுலும் அஞ்சனதேவியின் அருளினுலும், நாரதமுனிவரின் ஆசியினுலும், மாருதிக்கும், சகுந்தனுக்கும், அடியேனுக்கும் ஏற்பட்ட மலைப் போன்ற ஆபத்து, பனிபோல் நீங்கியது. ஆகவே

பெரியோர்களே, யாவரும், அடியேனது ஆஸ்ரமத்தில் பல நாட்கள் தங்கியிருந்து என்னையும் என் மனைவியை மகிழ்வுறச் செய்ய வேண்டுகின்றேன்.

நார. விசுவாமித்திரரும், அஞ்சனாதேவியும் இதற்கு ஒப்பியே வேண்டும்.

விசு. சரி எனக்கு ஒரு ஆக்ஷேபணையுமில்லை. தேவீ! தாங்க உடனேவா வேண்டும். இப்பொழுதுதான் என் ம குளிர்ந்தது.

அஞ். சரி! புறப்படுங்கள். எல்லாம் ஸ்ரீமன்நாராயணன் வுளம்போல் நடக்கட்டும்.

(யாவரும் சந்தோஷத்துடன் செல்லல்)

நாடகம் முற்றிற்று.